ஞானசம்பந்தம்

தருமையாதீனத் திங்கள் இதழ்

லர் 28] சௌமிய ஆண்டு ஆவணித்திங்கள் 10—9—69. [இ

தருமையாதீனம் வேளூர் ஸ்ரீ வைத்தியநாதசுவாமி தேவஸ்தானம்

மண்டலாபிஷேக விழாவில்



தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்களு
திருவாவடுதுறை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்க

தருமையாதீனக் குருமுதல்வர்



ஸ்ரீ குருஞானசம்பந்த சுவாமிகள்

உ

குருபாதம்

ஸ்ரீ குருஞானசம்பந்தர் அருள்வாக்கு

முப்பதுஞ்சென் றால்விடியும்
  முப்பதுஞ்சென் றாலிருளும்
அப்படியே யேதும்
  அறிநெஞ்சே — எப்போதும்
ஆங்காலம் எவ்வினையும்
  ஆகும் அது தொலைந்து
போங்காலம் எவ்வினையும்
  போம். (79)

ஆசிரியர் :

வித்துவான்
சோமசுந்தரத் தம்பிரான்
சுவாமிகள்

துணையாசிரியர் :

மகாவித்துவான்
சி. அருணைவடிவேல் முதலியார்

உ

குருபாதம்

"ஞானசம்பந்தம்"

தருமையாதீனத் திங்கள் இதழ்

மலர் 28 || 10–9–69 || இதழ் 10

உட்பொருள்

உ
குருபாதம்

ஞானசம்பந்தம்

தருமையாதீனத் திங்கள் இதழ்

மலர் 28] சௌமிய - ஆவணி - 10—9—69 [இதழ் 10

திருச்சிற்றம்பலம்

பொன்றயங் கிலங்கொளிந் நலங்குளிர்ந்த புன்சடை
பின்றயங்க ஆடுவாய் ! பிஞ்ஞகா ! பிறப்பிலீ !
கொன்றையம் முடியினய் ! கூடலால வாயிலாய்
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே. (சம்பந்தர்)

திருச்சிற்றம்பலம்

ஆடிய மாநடத்தன்

'உலகத்தைப் படைத்தல், காத்தல், அழித்தல் என்னும் முத்தொழிற் படுத்தி நிற்பவனே இறைவன்' என யாவரும் பொதுவாகக் கருதுவர். அவற்றுள்ளும் 'காத்தல்' என்பதைத் தோற்றுவித்த பொருளை நிலைக்கச் செய்து நடத்துதல் என்னுது, 'இடையூறு வந்த காலத்து அவ்விடையூறு நீக்கிக் காத்தல்' எனவே கொள்வர்.

உலகிற்கு இடையூறு அசுரர்களாலும், நன்மை தேவராலும் உளவாகின்றன என்பது பண்டுதொட்டு இன்றுகாறும் நிலைபெற்றுவரும் கொள்கை. எனவே, உலகிற்குக் கேடுசெய்யும் தீய ஆற்றல்களே அசுரக் கூட்டமாகவும், நலம்புரியும்

நல்ல ஆற்றல்களே தேவ கூட்டமாகவும் சொல்லப்படுகின்றன என்பது தெளிவாகும்.

தேவ கூட்டத்துள் இந்திரன், மால், பிரமன் என்பவர் தலைவராகச் சொல்லப்படுவர். இவருள் பிரமன் எல்லாவற்றையும் படைக்கும் கடவுளாய், உலகிற்குத் தந்தை எனச் சொல்லப்படுதலின், படைத்த அவனே சிலரை அழித்ததாகப் பெரும்பாலும் வரலாறுகள் இல்லை. இந்திரன், திருமால் ஆகிய இருவரும் பற்பல சமையங்களில் அசுரர் பற்பலரை அழித்து வெற்றிபெற்றனர் என்று கூறும் வரலாறுகள் பல உள. ஆகவே, இந்திரன், திருமால் ஆகிய அவ்விருவரும் உலகிற்குச் சிறந்த தலைவராக மதிக்கப்பெறுகின்றனர். ஆயினும், 'அவ்விருவரும் - ஏன்? அவர்களேயன்றி ஏனை எத்தேவரும் பெற்ற வெற்றிகள் யாவும் அவர் தாமே பெற்ற வெற்றியல்ல; அவர் அனைவரும் மேலான மாதேவனது அருளால் பெற்ற வெற்றியே' என்பதை அவர்கள் அவ்வெற்றிக் களிப்பில் ஆழ்ந்திருந்த காலத்தில் இறைவன் திருவருள் விளக்கம் தந்ததாகக் கேனோபநிடதம், சதபதப் பிராம்மணம் முதலியவற்றுட் பழமையாகவே சொல்லப்பட்டுவரும் வரலாறுகள் உண்டு.

சிவபெருமான் ஆமை ஓட்டையும், பன்றிக் கொம்பையும் மார்பில் அணிந்திருப்பது, திருமால் கூர்மாவதார வராகாவதாரங்களில் உலகிற்குச் செய்த நலங்காரணமாகக் கொண்ட செருக்கினைப் போக்கி அச் செருக்கால் விளைந்த தீங்கினை நீக்கியதன் அறிகுறியாகவே சொல்லப்படுதலைப் பலர் அறிவர். திருமால் இரணியனை அழித்தற்குக் கொண்ட நரசிங்கத்தை அதன் செருக்கடங்க அழித்தற்குக் கொண்ட வடிவமே சிவபெருமானது சரப மூர்த்தம் என்பது சரபோபநிடதம் முதலிய பல இடங்களிலும் இனிதெடுத்துச் சொல்லப்படுவது. இவை எல்லாம் நம் முன்னோர் உள்ளங்களில் சிவபெருமானது முதன்மை அசைவற நிலைபெற்றிருந்தமையையே காட்டும்.

இவையேயன்றி மற்றுமோர் உயர்ந்த வரலாறு மிகப் பழமையானதாகக் காணப்படுகின்றது. அது சிவபெருமான் காளியோடாடிய வரலாறு. அது, 'தாருகன்' என்னும் அசுரன் ஒருவன் வலிமை மிக்கவனாய்த் தேவர் பலரையும் பெரிதும் துன்புறுத்திநிற்க, அத்துன்பத்திற்கு ஆற்றாத

தேவர்கள் சிவபிரானிடம் சென்று முறையிட்டபொழுது அவர் உமாதேவியின் கூருக விளங்குகின்ற காளியை விடுத்தலும், அவள் சென்று தனது சூலத்தால் அத்தாருகனை அழித்து அவனது உதிரத்தைக் குடித்தமையால் வெறிகொண்டு உலகத்தை அழிக்கத் தொடங்கியமையால், சிவபெருமான் சென்று அவளது செருக்கை நடனப்போரினுல் அடக்கினுர்' என்பதாகும். இவ்விடத்தில்தான் சிவபெருமானது ஊர்த்துவ தாண்டவம் பேசப்படுகின்றது. இத்திருநடனம் நிகழ்ந்த இடமாகச் சொல்லப்படுவதே, 'திருவாலங்காடு' என்னும் திருத்தலம். அங்குத்தான் ஆடற்பெருமான் அடியின்கீழ் அமர்ந்து பாடிக் காரைக்காலம்மையார் இன்புற்றிருக்கின்ருர்.

சிவபெருமான் ஆடும் பெருமானுக ஆனதற்குக் காரணம் தாருகாவனத்து முனிவர் விடுத்த 'முயலகன் என்னும் பூதனை மிதித்து ஆடியதே என்று கந்தபுராணமும், கோயிற்புராணமும் கூறுகின்றன; ஆயினும், காளியினது செருக்கை அடக்க நடனத்தை மேற்கொண்டமையே அதற்குக் காரணம் என்பது திருமுறைகளுட் காணப்படுவது.

''தேன்புக்க தண்பணைசூழ் தில்லைச்சிற் றம்பலவன்
தான்புக்கு நட்டம் பயிலும் அது என்னேடீ?
தான்புக்கு நட்டம் பயின்றிலனேல் தரணியெலாம்
ஊன்புக்க வேற்காளிக்கு ஊட்டாங்காண் சாழலோ''

என்னும் திருவாசகம் இதற்குச் சிறந்த சான்ருகும். ஆகவே, சிவபெருமானது நடனக் கோலம் நமக்குப் பலவற்றை நினைப்பிப்பதாயினும், காளிதன் செருக்கை அடக்கினமையையே முதற்கண் நினைப்பித்தற்கு உரியதாதல் அறியப்படும். தமிழ் மொழியின் முதற்காப்பியமாகிய சிலப்பதிகாரத்திலும் இளங்கோவடிகள், 'சிவபெருமானைக் கூத்தப் பெருமானுக முதற்கண் ஆக்கியவள் காளியே' என்பதுபட, ''இறைவனை - ஆடல்கண் டருளிய அணங்கு; சூருடைக் - கானகம் உகந்த காளி; தாருகன் பேருரங் கிழித்த பெண்'' * என்று கூறினர்.

---

* வழக்குரை காதை – 36 – 40 இதனுள், 'அணங்கு, காளி, பெண்' எனப்பட்டார் வேறு வேருனவர்போலச் சிலர் கருது வாராயினும், ஒருத்தியே என்பது, 'நங்கை, அணங்கு, காளி - பெயர்' என்ற அரும்பத உரையாளர் குறிப்பால் விளங்கும்.

'சிவபெருமானைக் காளியே ஆடல் கண்டாள்' என்றதனால், அதற்குமுன் அவன் ஆடலை மேற்கொள்ளாமை பெறப்படும். ஆகவே, இறைவனது ஆடல் காளியது செருக்கை நீக்கினமையே உணர்த்திநிற்பதாம். ஞானசம்பந்தரும், 'சிவபெருமான் நடனம் புரிதல் எற்றுக்கு' என்னும ஐயப்பாட்டிற்கு,

'' நாடுந் திறத்தார்க்கு அருளல்லது நாட்டலாமே ''

என்று அருளிச்செய்த விடையும் தாருகாவன முனிவருக்கு அருளிய அருளினும், காளியின் செருக்கை அடக்கி உலகைக் காத்த அருளுக்கே பெரிதும பொருந்துகின்றது. எனவே, மேற்காட்டிய திருவாசகத்தில் மாணிக்கவாசகர் சிறந்தெடுத்து ஓதியதையே ஞானசம்பந்தர் குறிப்பால அருளிச்செய்தார் என்றல் பொருந்தும இவ்வாற்றால் நாவுக்கரசா தமது தசபுராணத் திருப்பதிகத்துள் சிவபெருமானை, 'மாநடப் பெருமான்' எனக் குறிப்பிடும் முகத்தால அவனது முதன்மையை விளக்கியருளுகின்றார்.

'' நீடுயர் விண்ணும் மண்ணும் நெடுவேலை குன்றொ
டுலகேழும் எங்கும் நலியச்
சூடிய கைய ராகி இமையோர் கணங்கள்
துதியோதி நின்று தொழலும்
ஓடிய தாரு கன்ற னுடலம பிளந்தும்
ஒழியாத கோபம ஒழிய
ஆடிய மாநடத்தெம் அனலாடி பாதம்
அவையாம் நமக்கோர் சரணே ''

என்பது அத்திருப்பாட்டு. இதனுள் தாருகன்றன் உடலம் பிளந்தவள் காளி என்பது குறிக்கப்படாவிடினும், வரலாற்று முறையாற் கொள்ளக்கிடப்பதேயாம். அல்லாக்கால் ஒழியாத கோபம் சிவபெருமானுக்கே உண்டாயதாய்ப் பின் அஃது ஒழியுமாறு தானே ஆடி ஒழிந்தான் எனப் பொருள்கொள்ள நிற்கும் அது பொருந்தாமை வெளிப்படை. ஆகவே, உமையம்மைதன் கூறாகிய காளியது செருக்கையே அடக்கினமை கூறுமுகத்தால் சிவபெருமானது முதன்மையை நாவுக்கரசர் அருளிச்செய்தார் என்க.

விண்ணும், மண்ணும், பிறவும் நலிவெய்தச் செய்தவன் தாருகன். அவனது துன்பத்தைப் பொறுக்கமாட்டாது தேவர்

கள் சிரமேற் குவித்த கையராய்ச் சிவபெருமானைத் துதித்து வேண்டினர். அவர்கள்மீது இரக்கங்கொண்ட சிவபெருமான் காளியைத் தாருகனை அழிக்குமாறு விடுத்தார்.* அவள் தாருகனை அழித்து பின்னும் ஒழியாத கோபமாகிய செருக்கு ஒழியுமாறு ஆடிய மகாநடனத்தையுடையவன் சிவபெருமான். ஆகவே, அவனே நமக்குப் புகல் என்கின்றார் நாவுக்கரசர்.

"அனல் ஆடி" என்றதும், அனலைக் கையில் ஏந்தியும், அனலின் இடையில் நின்றும் ஆடும் நிலையும் அவனது முதன்மையை இனிது விளக்கும் என்ற குறிப்புடையதாகும். அயன் மால் முதலிய தேவரது செருக்கினை அடக்கி உலகை வாழ்வித்ததேயன்றிச் சத்தியின் கூறுகிய காளியின் செருக்கை அடக்கியும் உலகை வாழ்வித்த பெருமான் சிவன் என்று முன்னையோர் கொண்டனர் என்றால், அவனையன்றி முதல்வராகப் பிறர் ஒருவரை ஆன்றோர் கொண்டிலாமை அறிந்து பயன் கொள்ளுதலே தக்கதாம்.

---

* தாருகன் பெண்ணால் அல்லது அழியாத வரம் பெற்றவன் எனவும் அதனால் சிவபெருமான் உமாதேவியை நோக்க அவ்வம்மை தனது கூறு ஒன்றைச் சிவபெருமானது கண்டக் கறையில் வைத்து ஒரு பெண்ணைத் தோற்றுவித்தாள்; அவளே காளி எனவும் புராணங்கள் கூறும்

EXTRACT FROM THE VISITORS' BOOK

Dharmapuram Adhinam

Sri Sattanathaswamy Devasthanam, Sirkazhi.

"Devotees to the temple owe a deep debt of gratitude to all those connected with this temple - the zeal and pleasure with which the authorities here take pains to maintain the temple, to take the devotees around and make them realise the divine grace. I am thankful to them and on behalf of all the devotees we have to wish the temple authorities continued Divine grace to help."

With humble regard,

(Sd.) S. Chandrasekhar,

8—8—69, Dy. Acct General, Madras.

குருபாதம்

குருவருள்

அருள்நெறியும் அறநெறியும்

ஒழுக்க வகை

'யாவும் இறைவனது அருளாணையின் வண்ணம் நடைபெறுகின்றன; அதனால் அவன் அருளைப்பெற முயல்வதே தக்கது' என்பது அருள்நெறி. இறைவனது அருள் உண்மையைத் தெளியமாட்டாது, 'அறமே எவ்வாற்றானும் நன்மை பயப்பது; அதனால், அறத்தைப்பெற முயல்வதே தக்கது' என்பது அறநெறி. அருள் நெறியால் பிறப்பற்ற வீடுபேறு உண்டாகும். அறநெறியால் நற்பிறப்பும், அப்பிறப்பில் நன்மையும் உளவாகும்; 'இவ்விருநெறிகளில் அறநெறியில்தான் ஒழுக்க வகை வற்புறுத்தப்படுகின்றது, அருள்நெறியில் ஒழுக்கவகை வற்புறுத்தப்படுவது இல்லை, இறையன்பு ஒன்றே வற்புறுத்தப் படுகின்றது' என்பது போலச்சிலர் நினைக்கின்றனர். உயிர்கள் வீடுபேறாகிய மேல்நிலையை அடைதற்கு அறநெறி கீழ்ப்படியும், அருள்நெறி மேற்படியுமாய் அமைந்துள்ளனவன்றி, இவ்விரு நெறியும் ஒன்றுக்கொன்று தொடர்பே இல்லாத வேறு வேறு நெறிகள் அல்ல. ஆகவே, அறநெறியின்றி அருள்நெறி யிருத்தற் கில்லை என்பதும், அருள்நெறியை யன்றி அறநெறிக்கு உரிய உண்மைப்பயன் வேறில்லை என்பதும் இனிது விளங்கும்.

இவ்வாறாயினும் அறநெறியில் இறையருள் சிறப்பாக விளங்காது, அறமே சிறப்பாக விளங்கி நிற்றலும், அருள்நெறியில் அறம் சிறப்பாக விளங்காது இறையருளே சிறப்பாக விளங்கி நிற்றலும் அவற்றின் இயல்பால் அமைந்தனவாம். ஆகவே, இறைவன் அருளைப்பெறும் அளவிற்குத் துணைசெய்யும் ஒழுக்கவகை, அருள்நெறியில் அங்ஙனமே முற்ற எடுத்தும், அறநெறியில் அவ்வாறன்றி அறத்தைப் பெறும் அளவிற்கு மட்டுப்படுத்தியும் கூறப்படும் என்று உணரலாகும். ஒழுக்க வகையை அறத்தைப்பெறும் அளவிலே கூறினும், இறைவன் அருளைப்பெறுதற்கு அது துணையாமாற்றிற்குத் தோற்றுவாய்

செய்து நிற்பதே உண்மை அறநெறியாகும். திருவள்ளுவர் செய்துள்ள திருக்குறள் அவ்வாறு அமைந்திருத்தலாலே அஃது உண்மை அறநூலாய் விளங்குகின்றது. 'அறம், பொருள், இன்பம், வீடு' என்னும் உறுதிப்பொருள் நான்கனுள் வீடு தவிர ஏனைய மூன்றையே அவர் கூறியதனால் அவர் அறநூலே செய்யப்புகுந்தார் என்பதும், வீட்டைத் தனிப்பட எடுத்து விரித்துக் கூறாதொழியினும், பாயிரத்துள் கடவுள் வாழ்த்தும், அறத்துப்பாலின் இறுதியில் 'ஞானம்' என்னும் பகுதியாகச் சில அதிகாரங்களும் வைத்து அவற்றுள்ளும் பொதுப்படவே வீட்டைக் கூறிச்சென்றமையால், அருள் நெறிக்கு அவர் தோற்றுவாய் செய்து போந்தார் என்பதும் இனிது விளங்குவனவாம். ஆகவே, ஒழுக்கவகை அருள் நெறியில் பொது அளவிலும் இருத்தல் காணலாம்.

அருள்நெறியை அருளிச்செய்த திருமூல நாயனர்,

"கொலையே, களவு, கள் காமம், பொய் கூறல்
மலைவான பாதக மாம்; அவை நீக்கித்
தலையாம் சிவனடி சார்ந்தின்பம் சார்ந்தோர்க்கு
இலையாம் இவைஞான னந்தத் திருத்தலே"

என 'கடிவன கடிந்தொழுகினோரே சிவனடி சேர்தற்கு உரியவர்' எனக் கூறியதைக் காண்கின்றோம்.

'ஐம்பெரும் பாவங்கள் (பஞ்ச மாபாதகம்)' எனப்படும் ஐந்தையும் ஓரிடத்திலே இங்ஙனம் தொகுத்துக் கூறியதேயன்றி அவற்றுட் சிலவற்றை வேறு வேறாக வகுத்தும் கூறி விலக்கினர் திருமூலர்.

கொல்லாமை :

'குருபூசைக்கும், சிவபூசைக்கும் சிறப்பாக உரிய மலர், பிறிதோர் உயிரைக் கொல்லாமை' என்பதை அவர்,

"பற்றாய நற்குரு பூசைக்கும் பன்மலர்
மற்றோர் அணுக்களைக் கொல்லாமை ஒண்மலர்"

என்பதனால் வெளியிட்டார். பிறிதோர் உயிரைக் கொல்லாதிருந்தால்மட்டும் போதாது; பிறரால் கொல்லப்பட்டுவரும் புலாலையும் உண்ணலாகாது என்பதனை,

புலால் உண்ணாமை :

" பொல்லாப் புலாலை நுகரும் புலையரை
எல்லாரும் காண இயமன்றன் தூதுவர்
செல்லாகப் பற்றித் தீவாய் நரகத்தில்
மல்லாக்கத் தள்ளி மறித்துவைப் பாரே "

எனக் கூறுதல் காணலாம். இத்திருமந்திரப் பொருள்,

" உண்ணாமை யுள்ள துயிர்நிலை; ஊன்உண்ண
அண்ணாத்தல் செய்யா தளறு "

என்னும் திருக்குறளில் நயம்பட அமைந்திருத்தல் காணலாம்.

கள்ளுண்ணாமை :

'கள்ளுண்பவர் ஒன்றையும் அறியமாட்டாது மயங்கிக் கிடப்பார், ஆதலின் அவர்கள் பசு பாசங்களின் இயல்பை ஓர்ந்துணருமுகத்தால் உயிர்க்குயிராய் உள்ள இறைவனை அறிந்து அவனோடு ஒன்றுதல் எவ்வாறு' என்று திருமூலர் இரங்கிக் கூறும் திருமந்திரம் இது :

" உள்ளுண்மை ஓரார்; உணரார் பசுபாசம்;
வள்ளன்மை நாதன் அருளினில் வாழ்வுறார்;
தெள்ளுண்மை ஞானச் சிவயோகம் சேர்வுறார் ;
கள்ளுண்ணும் மாந்தர் கருத்தறி யாரே.

'வாமம்' என்கின்ற சத்தி சமயத்தோர் (சாத்தேய மதத்தினர்) 'சத்திக்கு விருப்பமானது கள்' என்று சொல்லிக் கட்குடத்தை நிவேதித்துப் பின்பு அதனை உண்டு களித்துக் கூத்தாடுவர். அவரது அறியாமையைத் திருமூலர் வெளியிடும் பாங்கு அறியற்பாலது,

" சத்தியை வேண்டிச் சமயத்தோர் கள்ளுண்பார்;
சத்தி அழிந்தது, தம்மை மறத்தலால்;
சத்தி சிவஞானந் தன்னில் தலைப்பட்டுச்
சத்திய ஞானஆ னந்தத்திற் சார்தலே."

'சத்தியாவது சிவஞானமேயாக அதனையறியாது கள்ளைச் சத்தி என்று உண்டு சத்தி கெட்டுத் தள்ளாடுவது ஏனோ'

என்றொன்றுர் திருமூலர். "வாமத்தோர் தாமும் மதுவுண்டு மாள்பவர்" என்பதும் அவர் வாக்கு.

பிறன் இல் விழையாமை :

பிறன் இல் விழைதலும், பொதுமகளிரை விரும்பலும் போல்வனவே பஞ்சமா பாதகங்களுள் ஒன்ருகச் சொல்லப்பட்ட மிக்க காமம் என்பதுபற்றி அவற்றையும் திருமூலர் வேறெடுத்தோதி விலக்குதல் காணலாம்.

"ஆத்த மனையாள் அகத்தில் இருக்கவே
காத்த மனையாளைக் காமுறுங் காளையர்
காய்ச்ச பலாவின் கனியுண்ண மாட்டாமல்
ஈச்சம் பழத்துக் கிடருற்ற வாறே"

என்பது பிறன்மனை நயத்தலைக் கடிந்துரைக்கும் மந்திரங்களுள் ஒன்று. இதனுள் ஒவ்வொருவனும் தனக்கு உரியவளாக மணந்துகொண்ட மனையாளை, 'ஆத்த மனையாள்' என்று திருமூலர் குறித்திருத்தல் பொருள் நிறைந்த ஒன்று. அஃதாவது மனைவியை 'அறம், பொருள், இன்பம்' என்னும் மூன்றிற்கு மட்டுமே துணையாகக் கருதுதல் அறநெறி முறைமை ஆயினும், அவற்ருேடு வீட்டிற்கும் துணையாகக் கருதுதலே அருள்நெறி முறைமை. பெரிய புராணத்துட் சொல்லப்பட்ட நாயன்மார்களுள் திருநீலகண்டர் தம் மனைவியார் கூறியசூள்மொழி, சின்னுட்களே இனிது செல்லற்பாலனவாய அவர்களது அரும்பெறல் இளமைப் பருவத்தைப் பயனில்லாது ஒழியச் செய்ததாயினும், சிவபத்தி மிக்க செம்மலாராகிய நாயனரது பெருமைக்குச் சிறிதும் ஏலாத இன்பத் துறையினில் எளியராய்க் கண்டார்கண் தாமும் இயல்பினைத் தடுத்து அவரது நிலையின் திரியாது அடங்கி நிற்கும் பெருமையை நிலைநிறுத்தியதோடு, இருவரும் என்றும் மாரு இளமைபெற்றுச் சிவலோகத்தில் பன்னெடுங்காலம் தூய இன்பந் துய்த்திருக்கச் செய்ததென்ருல் அவ்வம்மையார் போலும் ஆத்த மனையார் பிறர் இருப்பரோ!

இவ்வாறே இயற்பகையார், இளையான்குடிமாறர், சிறுத்தொண்டர் முதலிய நாயன்மார்கள் தம் துணைவியரும் தம்தம் கொழுநரோடு தாமும் வீட்டுலகிற் சென்று தூய இன்பந்

தைய்த்து நீடு வாழத் துணைசெய்த ஆத்த மனைவியராய் நின்றமை வெளிப்படை. அவர்களுள் மங்கையர்க்கரசியார் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கவர். ஏனெனில், அவரது துணையில்லையேல் அவர்தம் கணவனாகிய கூன்பாண்டியன் உடற்கோட்டத்தோடு உள்ளக் கோட்டமும் நீங்கிச் செல்கதிக்கு அணியனாகும் நிலையைப் பெற்றிருத்தல் இயலாதன்றோ! எனவே, திருமூலர், ஒருவன் தனக்கு உரியவளாகக் கொண்ட மனைவியை 'ஆத்த மனையாள்' என்றது எத்துணை ஆழ்ந்த பொருளுடையது என்பது அறியலாகும்.

'ஆத்த மனையாள்' என்பதற்கு, 'உறுதுணையாய மனைவி' என்பது பொருள். அப்பொருளை, 'அறமுதலிய மூன்றற்கும் உறுதுணை' என்ற அளவில் மட்டுப்படுத்தியும் கொள்ளலாம். அவ்வாறன்றி 'வீடுபேற்றிற்கும் உறுதுணை' எனப் பெரிய அளவிலும் கொள்ளலாம். மேற்கூறியவாற்றால், விரிந்த பொருளைக் கொள்ளுதலே திருமூலரது திருவுள்ளமாகும். ஆகவே, அத்தகைமைகொண்ட மனையாளை விடுத்தும் ஒருவன் பிறள் ஒருத்தி பால் உள்ளத்தைச் செலுத்துவனாயின், அவன் பிறப்பால் மகனாயினும், குணத்தால் விலங்கெனவே படுவான். விலங்கிற்கும், அறம் முதலிய பொருள்கட்கும் சிறிதும் இயைபில்லாதது போலப் பிறன்மனை விழைபவனுக்கும், அறம் முதலிய பொருள் கட்கும் சிறிதும் தொடர்பில்லை என்பதையே திருவள்ளுவர்,

> "நலக்குரியார் யாரெனின், நாமநீர் வைப்பின்
> பிறர்க்குரியார் தோள்தோயா தார்"

என்னும் குறளால் கூறினர்.

பொதுமகளிரை விரும்பாமை:

> "வையகத் தேமட வாரொடுங் கூடி என்?
> மெய்யகத் தோர்உளம் வைத்த விதியது"

என்பது பொதுமகளிர் கூட்டத்தைத் திருமூலர் விலக்கிய பகுதி. இதில், 'மடவார்' என்றது விலைமாதரை. 'பொருள் கொடுப்பவனை விரும்பாது பொருளை மட்டும் விரும்புகின்ற பொது மகளிரிடத்தில் சிலர் இன்பங் காண்பது எப்படியோ' என்று

வினவி, 'அஃது அவர்கட்கு ஏற்பட்ட விதி' என்று விடையிறுக்கின்றார் திருமூலர். அதனை அவ்வளவில் நிறுத்தாது, 'கொண்ட மனைவி இருக்கக் கொள்கையில்லாப் பெண்டிரோடு கூடுவோர் கருப்பஞ்சாறு கையிலிருக்க அதனை உண்ணாமல் வேப்பெண்ணெயை விலைக்கு வாங்கி உண்கின்றவராவார்' என்பதை,

"கையகத் தேகரும் பாலையின் சாறுகொள்
மெய்யகத் தேபெறு வேம்பது வாமே"

என அவர் கூறுகின்றார்.

வாய்மை:

வாய்மையுடையார்க்கன்றிப் பொய்ம்மை யுடையோர்க்கு இறைவனை அடைதல் எவ்வாற்றானும் இயலாது என்பதைத் திருமூலர் 'வாய்மை' என்ற தலைப்பில் பலபடியாகக் கூறியுள்ளார். சிவபெருமான், "பொய்கலந்தாருள் புகுதாப் புனிதன்" "பொய்யொழிந்தார்க்கே புகலிடம்" என்றாற்போல்வன அவற்றுட் சில.

இங்ஙனம் மாபாதகங்களை எடுத்துக்கூறி விலக்கியதேயன்றி, நடுவு நிலைமை, அன்புடைமை, பொறையுடைமை, ஈகை முதலிய வற்றைத் திருமூலர் விதித்தும் இருக்கின்றார்.

நடுவு நிலைமை:

நடுவுநிலைமை தவறாதவர்களை, 'பிரம்மா, விட்டுணு, உருத்திரன்' என்ற மும்மூர்த்திகளுக்கு நிகராகக்கூடக் கூறலாம் என்கின்றார் திருமூலர். காரணம், நடுவு நிலைமை இல்லாத ஒன்றினாலேதான், பிறர்பொருள் வெளவல், பிறன்மனை விழைதல், பிறவுயிர்க்குத் தீங்கு நினைத்தல் முதலிய அனைத்துக் குற்றங்களும் நிகழ்கின்றன. அதனால், நடுவுநிலைமையுடையோர் எக்குற்றமும் இல்லாதவராவர். அவர்களைத் தேவர் என்றும், தேவரிலும் உயர்ந்த மூவர் என்றும் கூறலாம் என்பதே.

"நடுவுநின் றார்நல்ல கார்முகில் வண்ணன்;
நடுவுநின் றார்நல்ல நான்மறை ஓதி;
நடுவுநின் றார்சிலர் ஞானிக ளாவோர்;
நடுவுநின் றார்நல்ல நமபனும் ஆமே."

அன்பு :

அன்பு என்பது மிக உயர்ந்த ஒன்று என்பதற்கு, 'அன்பே சிவம்' என முதற்கண் அருளிச்செய்தவர் அருள்நெறித் தலைவராகிய திருமூலரே.

ஈகை :

" ஆர்க்கும் இடுமின்; அவர் இவர் என்னன்மின்;
பார்த்திருந் துண்மின்; பழம்பொருள் போற்றன்மின்;
வேட்கை யுடையீர், விரைந்தொல்லை உண்ணன்மின்;
காக்கை கரைந்துண்ணும் காலம் அறிமினே."

என்பது அவர் ஈகையை வலியுறுத்திய இன்னருள் மொழி. அறவுள்ளம் உடையார்க்கு அறம்செய்யச் செல்வம் வேண்டுவ தில்லை. செல்வம் இல்லாதோரும் எளிதில் அறத்தைச் செய்ய இயலும் என்பதைத் திருமூலர் வெளியிடும் திருமந்திரம்,

எளிய அறங்கள் :

" யாவர்க்கும் ஆம்இறை வற்கொரு பச்சிலை;
யாவர்க்கும் ஆம்பசு வுக்கொரு வாயுறை;
யாவர்க்கும் ஆம்உண்ணும் போதொரு கைப்பிடி;
யாவர்க்கும் ஆம்பிறர்க் கின்னுரை தானே."

என்பது.

அருள்நெறிக்கண் மிகப்பெரிய அளவில் குறிப்பிடப்பட்ட ஒழுக்க வகைகளே அறநெறியில் ஓர் எல்லைக்குட்பட விரித்துப் பேசப்படுதலைக் காண்கின்றோம். ஆதலின் அறநெறியோடு அருள் நெறியையும் கைக்கொண்டு நின்று மக்கள் நன்னிலை எய்துவார்களாக.

உ
குருபாதம்
தருமையாதீனம்
ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த
பரமாசாரிய சுவாமிகள்
தருமபுரம், மாயூரம் P. O.

23-8-1969.

"ஞாலம் நின்புகழே மிகவேண்டும் தென்
ஆலவாயில் உறையும்எம் ஆதியே"

Hon'ble Giriji,

Blessings,

On hearing the historic good news of your election to the highest office of our land, we have telegraphically congratulated you and you might have received the same. It is worthy of you one of the greatest senior patriots and leaders of our country has rightly been elected by a vast majority of our people and thus have shown their enthusiastic appreciation of your long years of unstinted service. It is most appropriate that such a personage of your stature and reputation to guide our country at such a troubulous period when a strong able administrator is required. You are worthy of all those attributes, and we pray the almighty Chockalinga to bestow you with the required strength and long life and prosperity.

We are happy to recall our former letter addressed to you when you were chosen as acting Present, we invited you to our place with your family at Dharmapuram to worship the Mahalakshmi Durga Devi and be blessed with all. It still stands and we are looking forward for that day. Prasads herewith. Blessings.

சித்தாந்த விஞவிடை

தருமையாதீனத் தமிழ்ப்புலவர், சித்தாந்தக் கலைமணி,
மகாவித்துவான், முதுபெரும்புலவர்.

திரு. சி. அருணைவடிவேலு முதலியார்

(மலர் 28, இதழ் 8, பக்கம் 452இன் தொடர்ச்சி)

சாதார தீக்கையும் நிராதார தீக்கையும்

மாணக்கன் : குருமூர்த்தியால் செய்யப்படும் நிருவாண தீக்கையின்றி ஞானம் உண்டாகமாட்டாதோ ?

ஆசிரியர் : 'விஞ்ஞானகலர், பிரளயாகலர், சகலர்' என மூன்ருக மேற்பகுத்துக் கூறிய வகைகளுள், மும்மலம் உடைய சகலருள் ஒருவருக்கும் ஆசான்மூர்த்தியின் அருள்இன்றி (நிருவாண தீக்கை இல்லாமல்) ஞானம் உண்டாகமாட்டாது' என்பதே சிவாகமங்களின் தீர்ப்பு. அஃதாவது, மும்மலம் உடைய உயிர்களாகிய சகலர்க்கு ஆணவமல மறைப்பு மிகவும் வன்மையாய் இருத்தலால், அம்மறைப்பு, இறைவன் ஆசான் மூர்த்தி வாயிலாகச் செய்யும் பலவகைக் கிரியைகளால் அன்றி நீங்காது என்பதும், பலவகைக் கிரியைகளால் ஆணவமல மறைப்பு நீங்கிய பின்பும், ஞானத்தை முதற்கண் சில சொற் களால் அறிவுறுத்தியும், அதன்பின்னர் அவ்வாறு அறிவுறுத் தப்பட்ட பொருளை நூல்களோடு வைத்துச் சிந்திக்கச் செய் தும், அச்சிந்தனைக்கண் உளவாகின்ற ஐயங்களை உடன் இருந்து அவ்வப்பொழுது நீக்கித் தெளிவித்தும், தெளிவித்த பின்பும் அந்நிலையில் நிற்கும் முறைமையை எல்லாங் காட்டி நிற்பித்தும் உதவினலன்றிச் சகலர்க்கு ஞானம் தோன்றுதலும், அது பயன் தருதலும் இல்லை என்பதாம்.

ஆசான்மூர்த்தி செய்யும் இச்செய்கையெல்லாம் அவர் செயலன்றி அவரை ஆவேசித்துநின்று செய்யும் இறைவன் செயலேயாதலின், தீக்கை என்பன எல்லாம் சிவபெருமானது கிரியா சத்தியின் தொழிற்பாடேயாம். சகலர் பொருட்டுச் சிவ பெருமான் இவ்வாறு ஆசான்மூர்த்தியிடமாக நின்று செய்யும் இத்தீக்கை 'சாதார தீக்கை' எனப்படும். சாதாரம்—ஆதாரத் தோடு கூடியது

இறைவனது அருளற் செயலின்றி அருளாகிய ஞானத்தைப் பெறுதல் ஒருவர்க்கும் இயலாது ஆதலாலும், இறைவனது அருளாற்செயல் சகலர்க்கு ஆசாரியன் வழியாகவன்றி நிகழ மாட்டாது ஆதலாலும் சகலர்க்கு ஆசாரியர் செய்யும் நிருவாண தீக்கை இன்றி ஞானம் உண்டாகாது என்றே சிவாகமங்கள் அறுதியிட்டுக் கூறுகின்றன.

கண்ணனும், இராமனும் முறையே உபமன்னிய முனிவ ரிடத்தும், அகத்திய முனிவரிடத்தும் நிருவாண தீக்கை பெற்ற னர் என்பது அரிவம்சம், பாரதம், பாத்ம புராணம் முதலிய நூல்களில் கூறப்பட்ட செய்தியாகும். கண்ணனுக்கு உப மன்னிய முனிவர் நிருவாண தீக்கைசெய்தமையை,

"யாதவன் துவரைக்கிறை யாகிய
மாதவன் முடிமேல் அடிவைத்தவன்"

என்று சேக்கிழாரும் கூறினர். ஆகவே, சகலருக்கு ஆசான் மூர்த்திசெய்யும் நிருவாண தீக்கையாலன்றி ஞானம் உண்டா காது என்பது ஆகம சித்தாந்தமாகும்.

மாணுக்கன் : ஆசான் மூர்த்தியின் அருள் உபதேசம்இன்றி ஞானம் பிறவாது என்ருல், பெரிய புராணத்துள்சொல்லப்பட்ட நாயன்மார்கட்கும், அவர்போன்ற மற்றும் சிலர்க்கும் அஃது இன்றியே ஞானம் உண்டாயது எவ்வாறு ?

ஆசிரியர் : அவர்களெல்லாம் முன்னைப் பிறப்பிலே உப தேசம் பெற்று நிட்டையிற் செல்லாது தடையுற்று நின்றவர் என்பதும், அதனல், அடுத்தஇப்பிறப்பில் அந்த ஞானங்காரண மாகச் சிவபிரானிடத்தில் என்றும்மாருத இயல்பான மெய்யன்பு பெற்றுவிடெய்தினர் என்பதுமே சிவாகம நூல் துணிபு, சிவ பிரானிடம் என்றும் மாருத மெய்யன்பு உண்மை ஞானம் இன்றி எய்தாது என்று உணர்க.

மாணுக்கன் : சகலர்க்கு இறைவன் இவ்வாறு ஆசான்மூர்த்தி இடமாக நின்று ஞானத்தைத் தருவானுயின், பிரளாயாகலர், விஞ்ஞானகலர் என்னும் ஏனை இருதிறத்தார்க்கும் அவன் ஞானத்தை அருளுதல் எவ்வாறு ?

ஆசிரியர் : ஒருமலம் உடைய விஞ்ஞானகலர்க்கு ஆணவ மல மறைப்பு மிக மென்மையாய் இருத்தலால். பக்குவ காலத்தில் அவர்க்கு இறைவன் உயிர்க்குயிராய் உள்நின்றவாறே அருளுவன். அவ்வாற்ருனே அவர் பயன் எய்துவர். மும்மலம்

உடைய பிரளயாகலர்க்கு ஆணவமல மறைப்புச் சிறிது வன்மையுடையதாய் இருத்தலின், அவருக்கு இறைவன ஒருமுறை அவர் முன் தனது உண்மை வடிவத்தில் தோன்றி அருள் புரிந்து நீங்குவான். தோன்றும் வடிவம் சதாசிவ மூர்த்தம் என்றும் மகேசுர மூர்த்தம் என்றும் கூறும் இக்கருத்துக்கள் உள. உள்நின்று உணர்த்தலும், முன்னின்று உணர்த்தலும ஆகிய இவை 'நிராதாரதீக்கை' எனப்படும். நிராதாரம் - ஆதாரத்தோடு கூடாதது கீழ்வரும் திருவிளையாடற் புராணப்பாடல் மூவகை உயிர்க்கும் இறைவன் ஞானத்தை அருளும் முறையைக கூறியது என்பர்.

வென்றுளே புலன்களைந்தார் மெய்யுணர் உள்ளந் தோறும்
சென்றுளே அமுதம் ஊற்றும் திருவருள் போற்றி! ஏற்றுக்
குன்றுளே இருந்து காட்சி கொடுத்தருள் கோலம் போற்றி!
மன்றுளே மாறி யாடும் மறைச்சிலம் படிகள் போற்றி!

இங்ஙனம் அவரவரும் பெறும் ஞானமே விடுபேற்றிற்குச்சாதனம் எனவும், தவங்கள் பலவும் ஞானமாகிய சாதனத்திற்குச் சாதனம் எனவும் சாதனங்களின் இயல்புபற்றி ஒருவாறு உணர்ந்து கொள்க.

சாதன இயல் மூற்றிற்று.

EXTRACT FROM THE VISITORS' BOOK

Dharmapuram Adhinam

Sri Sivalogathiagarajaswami Devasthanam, Achalpuram.

திருஞானசம்பந்தர் முக்தி அடைந்த திருநகரையும் திருக்கோயிலையும் காணுகின்ற வாய்ப்பு எனக்கு இன்று கிடைத்தது. தமிழில் பக்தியைக் கலந்து தரணிக்குத் தந்த திருஞானசம்பந்தரின் மணக்கோலத்தை இத் திருக்கோயிலில் நானும என் வாழ்க்கைத் துணைவியும் எனது இரு மகன்களும் நண்பர்கள் திரு. பிச்சை, திரு நடராசன் இவர்களோடு கண்டுகளித்தேன். சீரிய முறையில் கோயிலினைக் கண்காணித்துவரும் தருமபுரம் ஆதீனத்தார் போற்றுதற்குரியவர்கள். வாழ்க அவர்கள்தம் தமிழ்த்தொண்டு, சைவ மறைத்தொண்டு.

(ஒ-ம்.) பு. ரா. கோகுலகிருஷ்ணன்,
நீதிபதி, உயர்நீதிமன்றம்,
6—9—69. தமிழ்நாடு.

திருவள்ளுவரும் கச்சியப்ப முனிவரும்

திருக்குறள் வேள்
திரு. ஜி. வரதராசப் பிள்ளை B. A.,

(மலர் 28, இதழ் 9, பக்கம் 530 இன் தொடர்ச்சி)

கச்சியப்ப முனிவர்.

" நன்றி புரிந்தோர் மற்றொருகால் நவைகள் புரிந்தாராயிடினும்
ஒன்றும் உதவியே மதித்திட்டு ஓம்பா நவையை மறந்தவரை
என்றும் மறவா திருந்திடுக இகப்பிற் கருவான் மறையோரைக்
கொன்று திரிவோர் பிழை சிறுகக்குன்ற மெனவே பிழை
பெருகும் "

என்று நாயனார் வாக்கையும் பரிமேலழகர் உரையையும் சேர்த்துக்கூறிய திறத்தினைப் போற்றி மகிழ்க.

அடுத்து உலக நடையினை அறிந்து செய்தலையே பெரியோர் மிகச்சிறந்த அறமாகக்கருதினர். திருவள்ளுவநாயனாரும் ஒப்புர வறிதல் என்ற அதிகாரத்தில் இரண்டு குறட்பாக்களில் ஒப்புர வாளனின் பெருமையை வியந்து பாராட்டுகிறார். ஒப்புரவாளனை ஊருணிக்கும் பயன் மரத்துக்கும் ஒப்புமைகூறிப் போற்றுகிறார்.

" ஊருணி நீர்நிறைந் தற்றே உலகவாம்
பேரறி வாளன் திரு "

" பயன்மரம் உள்ளூர்ப் பழுத்தற்றால் செல்வம்
நயனுடை யான்கண் படின் "

ஊருணி என்பது சிற குளம். அதிலுள்ள நீர் ஊரிலுள்ளவர் யாவரும் அருந்தி மகிழ்தற்குரியது. அதைப்போன்று ஒப்புர வாளனின் செல்வமும யாவரும் பெற்று மகிழ்தற்குரியது. மாணிக்கவாசக அடிகளும் சிறந்த தலைமகனது இயல்பைக்கூற வந்தபோது,

" ஊருணி உற்றவர்க் கூரன் " என்று கூறியுள்ளார். இனி திருநாவுக்கரசர் இறைவனது பெருங்கருணையைப் பாராட்டிக் கூறியபோது,

" ஏரி நிறைந்தனைய செல்வன் கண்டாய்"

என்றார். ஊருணி ஊரிலுள்ளார் குடிநீராக மட்டும் பயன் படுத்த உதவும். ஆனால் ஏரியோ எல்லா வகையாலும் பயன் படும். ஏரியிலே ஒரு பக்கம் ஊரார் குடிநீர் கொண்டு செல்வர்; மற்றொரு பக்கம் நீராடுவர். வேறோர் பக்கம் ஆடுமாடு குளிப் பாட்டுவர். இவ்வாறு பல்லாற்றாலும் பயன்படுத்தப்பட்ட போதிலும் ஏரிநீர் அகண்டமாயிருத்தலால் அதன் தூய்மை கெடாது. அதைப்போன்று இறைவன் வேண்டியார்க்கு வேண்டியவாறு வழங்கித்தான் விகாரமின்றியிருத்தலே வியந்த படி. அடுத்து ஊர் நடுவே பழுத்துப் பயன் தருகின்ற மரமும் ஊர் மக்களுக்குத் துன்பமின்றிப் பறித்து உண்ணுதற்குப் பயன்படும்.

கச்சியப்ப முனிவர்,

" ஊருணி நடுவூர் நின்ற வொண்பழத் தருவும் போல
பேருறு முயற்சி தன்னால் பெருக்கிய பொருள்க ளெல்லாம்
சீருறு யாவர் மாட்டும் செலுத்தி ஒப்புரவில் நிற்றி
யாரும் ஒப்புரவால் கேடுண்டாயின் அதுவு நன்றே"

என்று கூறியது எத்துணை ஒப்பாகவுள்ளது. மேலும்,

" ஒப்புரவினால் வரும் கேடெனின் அஃதொருவன்
விற்றுக்கோள் தக்கது உடைத்து"

என்ற குறட்பாவின் விளக்கமாகக் கடைசி அடி அமைந்துள் ளதையும் கண்டு மகிழ்க.

இனி, அறம் நிலைபெற வேண்டுமாயின், அரசு வலிமை யுடையதாக, மக்கள் நலனைப்பாதுகாக்கக்கூடியதாக அமைய வேண்டுமன்றோ! ஆதலின் அரசைக்காக்கக்கூடிய அரசனின் தகுதியைக் கூறுகின்றார் நாயனார். அரசனுக்கு இயல்பாக வேண்டியவை வினையிடை அஞ்சாமையும் வினை செய்வார்க்கு அளித்தலும், விளங்கிய அறிவும், வினையிடை ஊக்கமும் ஆகும்.

இன்னும் வினையினை முடித்தலும், ஆண்மையோடு வெம்மை கொலை முதலிய குற்றங்களைக் கடிதலும், இதற்கு மேலாக தன் நிலையில் திரியாது செய்தலும் வேண்டும்.

"அஞ்சாமை யீகை அறிவூக்கம் இந்நான்கும்
எஞ்சாமை வேந்தற்கு இயல்பு"

"தூங்காமை கல்வி துணிவுடைமை இம்மூன்றும்
நீங்கா நிலனாள் பவர்க்கு"

"அறனிழுக்கா தல்லவை நீக்கி மறனிழுக்கா
மான முடைய தரசு"

"வினையின் அஞ்சாமை நிற்றல் வினையருக்களித்தல்
செய்யும்
வினையிடை மனமேற் சேறல் விளங்கிய அறிவு வல்லே
வினையினை முடித்தல் ஆண்மை வெங்கொலையாதி நீக்கல்
வினைவனர் மற்றும் வேந்தற்கியல்பு மைந்தா"

என்ற கச்சியப்ப முனிவர் வாக்கு மேலேகண்ட குறட்பாக்களின் விளக்கம்போல அமைந்துள்ளன.

இனி, நாட்டில் நல்லாட்சி இல்லையெனின், என்ன என்ன நிகழும் என்பதை நாயனர் வரிசைப்படுத்திக் கூறுகின்றார்.

"ஆபயன் குன்றும் அறுதொழிலோர் நூல் மறுப்பர்
காவலன் காவான் எனின்".

"கூழுங் குடியும் ஒருங்கிழக்கும் கோல் கோடிச்
சூழாது செய்யும் அரசு"

"மன்னர்க்கு மன்னுதல் செங்கோன்மை அஃதின்றேல்
மன்னுவா மன்னர்க்கு ஒளி"

"அறுதொழிலாளர் நூல்கள் அயர்ப்பரான் பயன் இன்றாகும்
முறைபெயலொழியுங் கூழ்ங்குடிகளு மொருங்குநீங்கும்
பெறுபயன் நாட்டில் குன்றும பிறங்கொளி நிலை பெருது
கறையின் மேற்பொருள் கைக்கொண்டு காவலை விடுப்பின்மைந்தா"

என்று கச்சியப்ப முனிவர் கொடுங்கோன்மையின் பயனை விளக்கியுள்ளார்.

வாழ்க்கையின் பயன் இரண்டு. அவை இன்பம் பேரின்பம் என்ற இரண்டுமாம. இவ்விரண்டினையுமம திருவள்ளுவர் போன்று வேறு பிற ஆசிரியர்கள் இத்துணைத் தெளிவாகக் கூறவில்லை. கச்சியப்ப முனிவர் செய்த தணிகைப் புராணத்திலும் திருவானைக்கா புராணத்திலும் பொய்யாமொழிப்புலவர் கருத்துக்கள் செறிந்துள்ளமையைப் பயின்றோர் நன்கு அறிவர்.

மேற்கூறிய வாற்றால் பொய்யாமொழிப்புலவரின் பொன்மொழிகளைத் தவநெறிச் சான்றோரும் ஏனையோரும் போற்றியுள்ளமை நன்கு விளங்கும்.

திருவள்ளுவர் திருவடி வாழ்க.

" கொழிதமிழ்க் கூடலில் கொன்றை வேணியான் "

வித்துவான். திருமதி. ப. நீலா

(மலர் 28, இதழ் 9, பக்கம் 500 இன் தொடர்ச்சி)

(21) கல்லானைக்குக் கரும்பு அருத்தியது

செல்லார் பொழில்சூழ் மதுராபுரிச் சித்தர் எல்லாம் வல்லவர் என்பதை மக்கள் கண்டனர். மன்னனையும் உணர வைத்தார் இவ்விளையாடல் மூலம்.

'சித்தர் பெருமானை யான் காணப் போவதுவே முறை! அதுவன்றி அவரை இங்கே வரச்சொன்னது மடமையன்றோ. அவர் எற்றால் குறையுடையார் என்னைக் கண்டு மீள' என எண்ணிய அபிடேக பாண்டியன் மதுரை நாயகனைக் கும்பிடும் வழக்கத்தில் அன்று தை முதல் நாளாகவும் அமையவே மிக்க விருப்பத்தோடு சொக்கேசர் கோயிலை நெருங்கிவந்து வணங்கி வலம்வரத் தொடங்கினான். அவன் முன்னே வருகின்ற சட்டையிட்ட காவலர்கள் அரசனுக்கு முன்பாக அங்கே வந்தமர்ந்திருக்கும் சித்தரைக்கண்டு கைப்பிரம்பை வீசி அச்சுறுத்தும் குரலில் எழுந்துபோகப் பணித்தனர். பின்னே வந்துகொண்டிருந்த பாண்டியன் பெரியவரைக் கண்டான். உள்ளத்தில் பெருகிய நேயத்திற்கும் அச்சத்திற்கும் காரணங்காணமாட்டானாய் 'உமக்கு எந்தநாடு - எந்தஊர் - என்னபிழைப்பு - உம் பேர்தான் என்ன' என்று வரிசையாக வினாக்களைத் தொடுத்தான். ஐயர் புன்னகை தவழும் முகத்தோடு 'எந்தநாடுநகருள்ளும் திரியும் எமக்கு வித்தை நடத்துதலே தொழில். காஷ்மீர நாட்டின் காசிமுதல் பலவிடத்தும் வித்தை காட்டிவரும் எமக்கு உன்னால் ஆகவேண்டியது ஒன்றுமில்லை தென்னவனே' என்ற சித்தரின் இறுமாப்பு சிந்தையைத் தொட மாறன் இவர் செருக்கை எற்றால் அளவிடுவேன் என்று தேரும் நேரத்தில்.........

கன்னலைக் கறிக்குமா கல்யானை :

ஓர் உழவன் யாரும் கமுகோ என்று ஐயுறும் வண்ணம் செழித்து வளர்ந்த ஓர் கன்னலைச் சுமந்துவந்தான். தெளிந்த சிந்தையில் ஓர் திட்டம் உதயமாயிற்று தென்னவனுக்கு. நீரும் பிறையும் கரந்தாரை உணராமல் உற்றுநோக்கி,

வல்லாரில் வல்லே மெனவும்மை மதித்த நீரிக்
கல்லானைக் கிந்தக் கரும்பை யருத்தி னெல்லாம்
வல்லாரு நீரே மதுரைப்பெரு மானு நீரே
அல்லா லெவர்நும் மனம்வேட்ட தளிப்ப னென்றான்.

‘இக்கல்லானை இக்கரும்பை உண்ணுமானால் மதுரைப்பெருமான் நீரேயாவிர் எனத் தெளிவேன் நும் மனம் விரும்பியதையும் தருவேன்’ என்றான். மூரலரும்பிய முகத்தோடு ‘எல்லாமறிந்த எமக்கொன்றிலும் ஆசையில்லை - உன்னாசை தீர நாமே தருவோம்; இதோ ‘கன்னல் கறிக்கும் கல்யானையைக் காண்’ - என்று அற்புதங் காட்டினார் சித்தர். கடாக்கல்யானை சித்தரின் கடைக்கண் பார்வை பட்டவுடன் மதம் மூன்றும் வழிய விண்வாய் அடைக்கும்படி வாய்திறந்தார்த்து மன்னவன் கைச்-சுவைத்தண்டைப் பறித்துத் தன்வாயில் அடைத்துக்கொண்டது. வழிந்த சாற்றை நக்க வண்டினங்கள் முந்தின. நிமல் சிறியிர்த்துநின்ற களிற்றைப் பின்னும் சித்தர் பார்க்க, மட்டுற்ற தாரான கழுத்தில் கண்ட மாலைதனை எட்டிப் பறித்தது. பார்த்த வீரர்கள் களிற்றின்மேல் பாய்ந்தனர். சித்தர் சிவந்து நோக்கக் கண்டாவளியைக் களிறு உண்டது. கண்கள் சிவப்புக் கொண்டான் அரசன். அவன் தமருள் சிலர் சித்தரைப் புடைக்க முந்தவே தம் கைப்போதுகொண்டு தடுத்தார். தடைபெற்றவர் கல்லாய்ச் சமைந்தனர். காவலன் கண்டான் - கருத்தில் தெளிவு கொண்டான். சித்தப்பெருமானடிதன் மாமுடி தீண்டப் ‘பிழையைப் பொறும்’ என்று தரையில் பணிந்தான்.

அன்புக் கிரங்கும் இன்ப உருவே!

இவரே ஆலவாய் அழகன் என்றுணர்ந்தான் மன்னன். ‘நும் மனம் வேட்டது அளிப்பன்’ என்றரற்றியவாய் அடைபட, உள்ளத்திலிருந்த இன்ப ஊற்றுக்கண் உடைபடத் திகைத்து

நின்ற தமிழ் வேந்தனை நோக்கிப் பெருமான் இன்புற்றார். வேண்டும் வரங்கேள் என்றருளியபோது - நன் புத்திரப்பேறு கேட்டுத் தாழ்ந்தான் தென்னன். அதை அருளியபின் வேழ மிசைக் கரம்வைத்தார். நீள்மூத்த மாலையைப் புழைக்கை நீட்டிக் கொடுத்தது போதகம். நீதிபிழைக்கா நெறியாளன் அதனை மழைக்கை நீட்டி வாங்கியதும் யானை ஏனையவற்றுடன் ஒத்ததாக மருவ உரவோன் வெருவினான் - வியந்தான்.

சோதிக்க ஒல்லுமோ ஆதியே! அரனே!!

நீ அருளியவை வேதங்கள். அவற்றின் பொருளாவானும் நீயே. உன் பாதம் சுமந்து, உன்னாமம் அர்ச்சித்துப் பன்னாள் பழகும் வேதங்கள் உன்னைக் கண்டுகொள்ள இயலாமல் அரற்றுமென்றால் ஆதியே! அமலனே! என் சோதனை நின்னிடம் தகுமா? பருப்பொருளுக்குப் பருப்பொருளாய் - நுண்மைக்கு நுண்மையாய் - அரியதாய் - எளியதாய் - காட்சியாய் - காண்பானாய் சாட்சியாய் நிற்கும் எல்லாங் கடந்த பொருளல்லவோ நீ!

நின்னான் மொழிந்தமறை நின்னடிகள் வந்தித்தும்
பன்னாளருச்சித்தும் பாதந் தலைசுமந்தும்
உன்னாமம் வாசித்து முன்னையறியேனென்று
சொன்னாலடியேன் சோதனைத்தோ நின்னியல்யே.

இவ்வாறாகப் போற்றிப் பன்னாள் பரமனடியானாக இருந்து விக்ரமனிடம் அரசப்பொறை ஈந்து பாசம் வென்று சித்தசாமி திருவருள் நோக்கால் மாறாவினைபத்துள் ஆழ்ந்தான் அபிடேக பாண்டியன்.

(வளரும்)

மனம்

திரு. நீலகண்ட சர்மா

(மலர் 28 இதழ் 9 பக்கம் 504 இன் தொடர்ச்சி)

பண்டிதர் இதுமட்டுமா செய்வார். அப்போது வேறு எது வேண்டுமானாலும் செய்திருப்பார். உடனே அதற்கு இசைந்தார். அது படிசெய்தார். உட்காரவைத்துக் காலில் விழுந்து கும்பிட்டு எழுந்து பார்த்தார். மங்கையைக் காணோம். அந்த இடத்தில் வெள்ளை தாடியும் மீசையுமாய் கையில் கமண்டலமும் யோகதண்டமுமாய் காட்சியளித்தார் வேதவியாஸ முனிவர். புயலும் மழையும் போய் எங்கும் ஒரே பிரகாசம். இருள் அகன்று ஆசிரமமே தூய்மை நிறைந்ததாயிற்று. அப்போது கேட்டார் வேதவியாஸர், ''பண்டிதரே! பலம் இந்திரியங்களுக்கா? உமது படிப்புக்கா?''

தனது அறியாமையை மன்னிக்கவேண்டும் என்று கோரி காலில் விழுந்து பண்டிதர் எழுந்ததும் முனிவர் மறைந்து விட்டார். அப்பேர்ப்பட்டவை புலன்கள்.

இவ்வளவு சக்திவாய்ந்த புலன்கள் தான் மனிதனுடைய ஸம்ஸார பந்தத்திற்குக் காரணமாயிருக்கிறது. மோக்ஷத்திற்கும் அவைகள்தான் காரணமாயிருக்கின்றன.

எப்போது ஜீவன் அந்தக்கரணத்தோடு, மனதோடு சேர்ந்து இந்திரியங்கள் வழியாக இயங்குகிறதோ அப்போது ராகாதி குணங்களோடு கூடிய ஸம்ஸாரபந்தம் ஆரம்பிக்கிறது. எப்போது இந்தத் தொடர்பு ஜீவனுக்கு இல்லாமல் ஆகிறதோ அப்போது, அது பரமாத்மாவின் அம்சமாகையால் அதோடு ஒன்று சேர்ந்துவிடுகிறது. ஆனால் ஜீவனையும் அந்தக்கரணத்தையும் சிறிது நேரத்திற்காவது பிரித்துவைப்பது எளிதல்ல. ஜீவன் அல்லது ஆத்மாவாகிய யஜமானன் உடலாகிய தேரில் புத்தியாகிய சாரதியை வைத்து மனதாகிய கடிவாணில் இந்திரியங்களாகிய குதிரைகளைப் பூட்டி சுகதுக்க பூர்ணமான உலக விஷயங்கள் எனும் பாதைகளில் கூட எப்போதும் சுற்றிக் கொண்டிருக்கிறான். அது, தான் செய்த கர்மங்களின் பலன்களை அப்படி அனுபவித்தாகவேண்டும்.

आत्मानं रथिनं विद्धि शरीरं रथमेव च ।
बुद्धिं तु सारथिं विद्धि मनः प्रग्रहमेव च ॥
इन्द्रियाणि हयानाहुः विषयांस्तेषु गोचरान् ।

(கடோபநிஷத்)

இந்திரியங்கள், புலன்கள், பலசாலிகளாயிருந்தாலும் அவைகளை இழுக்கும் தன்மை இருப்பதால் இந்திரிய விஷயங்களாகிய பொருள்களுக்கு அவைகளைவிட சக்தியுண்டு அந்தப் பொருள்களில் குணதோஷங்களையும், சுகதுக்கங்களையும் உருவாக்கும் மனது அவைகளைவிட பலசாலி. ஆனால் இந்த மனதையும் நன்மை தின்மைகளை எடுத்துக்காட்டி ஆட்டிவைக்கும் புத்தி அதைவிடப் பலம் வாய்ந்தது இவையெல்லாம் ஆத்மாவை ஒட்டியே நடப்பதினால் இவைகள் எல்லாவற்றையும்விட ஆத்மா தான் பெரிது என்று தெரிந்துகொள்ள வேண்டியிருக்கிறது.

इन्द्रियेभ्यः परा ह्यर्था अर्थेभ्यश्च परं मनः ।
मनसस्तु परा बुद्धिः बुद्धेरात्मा महान् परः ॥

(உபநிஷத்)

மனிதப்பிறவியின் பயனை அடைய நாம் முதலில் மனதைக் கட்டுப்படுத்துவது அவசியம்.

मनसैवेदमाप्तव्यं नेह नानास्ति किञ्चन ।

(உபநிஷத்)

மனதைக் கட்டுப்படுத்துவது என்றால் மனதின் உண்மை உருவமாகிய அகங்காரத்தை (மமதை) இல்லாமல் செய்யவேண்டும் என்று பொருள். இல்லற வாழ்க்கையில் ஈடுபட்டிருக்கும் காலம்வரை மமதை நம்மைவிட்டு அகலாது. அதற்கு இயன்ற வரை தீவிர வைராக்கியத்துடன் மண், பெண், பொன் ஆசைகளிலிருந்து மனதை அப்புறப்படுத்தினால் அவைகளிலுள்ள பற்றுதலைக் குறைத்துக்கொண்டால் படிப்படியாக நமது வாழ்க்கையும் பயனடையும். மனதோ குரங்கைப்போல் ஓரிடத்தும் நெடுநேரம் இராது. ஆகையால் அதைத்தவறான பாதைகளில் போகவிடாமல் அந்த வேளைகளில் பெரியோர்களையும் அடியார்களையும் சந்தித்துப் பேசிக்கொண்டிருக்கவோ, கோயில்களில் சென்று ஏகமனதாகக் கடவுளை நினைத்துப் பிரார்த்தனைகள் செய்யவோ. மனதைப் பரிசுத்தமாக எழுதியுள்ள நல்ல நூல்களைப்படிக்கவோ. அம்மாதிரியான சொற்பொழிவுகள் கேட்கவோ செய்யலாம்.

அதற்காக எல்லோரும் ஸன்யாஸியாக வேண்டாம். ஒவ்வொரு வரும் தனக்குள்ள அலுவல்களை நேர்த்தியான முறையில் செய்வது வேறு எதற்கும் பாதகமாகாது. தனக்கு அவசியமில்லாத விஷயங்களில் தலையிட்டு வீணாகக்கழிக்கும் நிமிஷங்களை மட்டுமாவது ஸத்தியமும், சாசுவதமுமான தன்னுடைய நன்மைக்காக செலவழிப்பதே பெரும் தபமாகும்.

உடலுக்கு எப்படி வாதம் முதலிய நோய்கள் வருகிறதோ அதைப்போல் மனதிற்கேற்படும் நோய்கள்தான் ராகம் முதலியவை

"रागादिरोगान् सततानुषक्तान्
अशेषकायप्रसृतानशेषान् ।
औत्सुक्यमोहारतिदान्"

(அஷ்டாங்கஹிருதயம்)

அதனால் ஏற்படும் பலன் அளவில்லாத ஆசை, அதனால் முன்பின் யோசனை இல்லாத செயல்கள் அதிலிருந்து உண்மை தெரியாமல் வேண்டியதைச் செய்ய இயலாது அழிவு ஏற்படுகிறது. அதைத் தவிர்க்க முன்சொன்ன வழிகளைத்தான் கடைப்பிடிக்க வேண்டும்.

சாந்தி, புலனடக்கம், கருணை இவைகள் உடயவர்களுக்கும் பெரியோர்களையும் அடியார் களையும அடுத்து வாழ்பவர்களுக்கும் கவலையே கிடையாது ஏ மனமே! நீ வீணாக அங்கிங்கு அலையாமையால் எப்போதும் பரப்பிரம்மத்தை நாடிச்செல்வாயாக.

समदमकरुणा सम्पूर्णानाम्
साधुसमागमसङ्कीर्णानाम्
चिन्ता नास्ति किल
मानस सञ्चर रे, ब्रह्मणि मानससञ्चर रे ॥

(சதாசிவபிரம்மம்)

(சமதம கருணா ஸம்பூர்ணானாம்
ஸாதுஸமாகம ஸங்கீர்ணானாம்
சிந்தா நாஸ்தி கில
மானஸ ஸஞ்சர ரே - பிரம்மணி
மானஸ ஸஞ்சர ரே)

சிவ சிவ.

பகற்கனவில் பாரதி

செஞ்சொற்கொண்டல், வித்துவான்,

திரு. சொ. சிங்காரவேலன் M. A., Dip.Ling.

மாலைத் தென்றல் வந்து தழுவிடச்
சோலைப் புறத்தைச் சாளரத் தின்வழி
நோக்கிய வாறே நுட்பமாய்ச் சிந்தனைப்
போக்குக் காட்டிய போக்கிலே போக்கி
இருந்தனன் ஓர்நாள்; எதிர்ப்புற மேசையில்
இருந்தன பனுவல் இனியன சிற்சில;
வார இதழும் வளரும்நாள் தாளும்
தீர வெளிவரும் திங்கள் இதழுமாய்ப்
பத்திரிகை சில பாங்கிற் கிடந்தன;
எத்துணை சொலினும் எத்துணை எழுதினும்
செந்தமிழ் மாந்தர் சிந்தையில் தெளிவு
வந்திடு மோதான்? வண்டமிழ் கற்றோர்
புதிய தமிழகப் போக்கினை உணர்ந்தே
அதிர்க்கும் கருத்தினை அவனி அறியுமோ!
என்றுநான் எண்ணினேன்; இதுவென்? என்னுடல்
தென்றலில் மிதந்தே செல்லுவ தாமோ?
இருசிறை கொண்டே எழுந்திடும் புள்ளாய்
மருவியே வானில் பறக்கின் றேனா?

• • *

எங்கும் நீலவான்; எங்கும் நீலவான்;
தொங்கும் விண்மீன் தூரிகை ஓவியம்
சிரித்ததெம் மருங்கும்; செந்நிறக் கோடுகள்
எரிந்திடும் தீத்திரள் இணைந்ததா மென்ன
நீலவா னிடையே கோலம் காட்டிடும்.
ஏலவே எங்கும் இருவிழி சுழற்றி
நிமிர்ந்து நடந்தேன்; நின்றேன் ஒருபுறம்;
அமிழ்த்திய பார்வை சிக்குண் டதனால்;

மாக்கவி பாரதி மருவிடும் நீலவான்
ஆக்குபே ரொளியில், அரும்பிய வீரமும்
புலமையும் வதியும் புன்னகை முகத்துடன்
கலகல வென்றே நகைத்திடல் கண்டேன் :
நெருங்கினேன் ; நின்றேன் ; நேர்மையின் பிழம்பை
ஒருங்குநான் நோக்கி, ‘உயர்குணப் புலவ!
வணக்கம்’ என்றேன் ; "வாழ்த்து!" – தீப்பொறி
அணைந்து தெறித்ததாய் வந்தது வாழ்த்து!
கண்ணீர் மிதந்த கவிஞன் இன்று
உண்ணீர் மையினால் உவந்திடல் கண்டேன் ;
வாழியென் றிடுகை வணங்கக் கூப்பினேன்.
‘ஆழியின் ஆழம் ; அகல்விசும் புயரம்
வாய்ந்த செந்தமிழ் வாழ்க்கையாய் கேளாய்,
தோய்ந்த துயரக் கறுக்கலில் கிடந்தே
வறுமைப் பனியின் வாடையில் மெலிந்து
சிறுமைப் பட்ட மெல்லுடல் விடுதலைப்
பட்டதால் அன்றோ பட்டன துன்பம்!
விட்டதால் அன்றோ விரைந்ததே இன்பம்’
என்றான் ; மீண்டும் இன்னகை விரித்தான்.
‘தென்றமிழ்க் கவிஞ! தேயம் நின்புகழ்
உணர்ந்துபின் தெளிந்த உரைத்திடும் கோடு ;
புணர்ந்திடும் புதுமை ; பொலிந்திடும் வளமை
சொல்லில் எளிமை ; துவளா நன்னடை
எல்லில் தோன்றும் இனிய விளக்கமாய்த்
தமிழிற் புதுக்கவி தழைத்ததே இன்று!
அமிழ்தாய் நீதரும் வசன கவிதையும்
வளர்ந்ததே ஐயா! வறுமையில் வாடிநீ
தளர்ந்தநாள் நின்னை நோக்கிடாத் தமிழகம்,
மாண்டநாள் மாண்டு மடிந்தனை என்றே
யாண்டும் கருதி யாத்ததும் இல்லையாம்
புத்தகம், கோடி விளைந்தன நாட்டில்!
பத்திரிகைபல பாங்கிற் செழித்தே,
எங்கும் அறிவின் இன்மணம் வீசிப்
பொங்கும் புதுமை பொலிந்திடும் ஐயா!’

என்றெலாம் வார்த்தை இசைத்துநான் முன்னே
நின்றவப் போதில் நெடும்புகழ்க் கவிஞன்,
'மக்கட் குழுவினர் மாண்புள்ள பனுவல்
தொக்கினி தறிந்தே தூய்மை காப்பரேல்
வாழ்ந்திடும் வையம்! இல்லையேல் வீணே
தாழ்ந்திடும்; அந்நாள் நிலைமையி' தென்றான்!
உண்மை யே; வீரம் ஓங்குபே ரறிஞ!
திண்மையாய்ப் புத்தகம் தெளிபயன் தருமால்;
காசினால் வாங்கிக் கருத்துரை கண்டு
பேசினால் கூடப் பெரும்பாவ மென்றே
கருதி ஒதுக்குவர்; கயமைசேர் இதழ்கள்
பெருகிடல் வீணே பேசினில் இங்கே;
புத்தகம் போற்றிக் காப்பர்' என்றேன்.
'புத்தகம் அந்நாள், புலவனே! வாங்குவோர்
இல்லையே நாட்டில்: இருக்கும் சிலரும்
தொல்லையே யின்றிப் பிறர்தம் நூல்களை
இரவலாய்ப் பெற்றே இரந்துகற் றலைவர்,
நிரவலாய் அந்நிலை; இருந்ததே ஐயோ!
குறைந்த விலையில் நிறைந்த பனுவல்கள்
அறைந்தே யளித்தும் அந்நாள் மாந்தர்
வாங்கிப் பயிலவும் வகையில் லாமல்
ஏங்கினர்; சிலரே ஏற்றுப் போற்றினர்;
எந்தநாள் சொந்தமாய் இனியபற் பனுவல்
செந்தமிழ் மாந்தர் படித்துச் சிறப்பர்?
என்றுநான் ஏங்கி இருந்ததும் உண்டு;
நன்றினும் இந்த நிலைமையோ நாட்டில்?
கூறெ'னக் கேட்டான் குணத்தமிழ்க் குன்று!
தேறெனக் கூறித் தேம்பினேன் சொன்னேன்;
'அறிவுப் பசியில் ஐயுற வில்லை;
அறிவினில் தெளிவு அடைந்திடல் சாலுமாம்
என்றதோ ருண்மையை எம்மவர் மறந்தார்;
மன்றினி லேறுவர்; மானமா முழக்குவர்;
எழுத்தாளர் வாழ்வே இலட்சியம் என்பர்;
கொழுத்திடும் புத்தக வெளியீட் டாளர்
காசினைக் காட்டார்; கலைமகள் நிழலில்

கலைஞ இங்கே: கைப்பொருள் போட்டு
நிலை .யர்த் திடவே நீள்பெரும் பனுவல்
வெ ’யிடத் தொடங்கின் வேம்பென வெறுப்பர்.
அளியரோ அளியர்; ஆறைந்து காசுகள்
போட்டிடில் வாரம் ஒருபுது மலராம்;
காட்டும் திங்கள் கவின்மிகு மலராம்,
எற்றுக்குப் புத்தகம்? எம்மது பொழுதும்
அற்றிடச் சிலவிதழ் போதுமே என்பார்.
புத்தகம் தனக்குப் பொருளில்ஓர் பகுதியை
மொத்தமா ஒதுக்கி முனைந்திட லின்றிப்
பொழுது போக்குதல் புறக்கணிக் கத்தகும்,
பழுதா மிந்நிலை பாரினில் மாறுக!
சமுதாய வாழ்விற் பெரும்பே றுக
அமுதாக நின்று நிலைத்திடும் இலக்கியப்
புத்தகம் வேட்போர் புவியினிற் சிலரே;
எத்தனை நாளிலில் இந்நிலை மாறுமோ?''
என்றே நிறுத்தினேன் சிந்தனைச் சுழியில்
நின்றான் போலும்; நெடும்புகழ்ப் பாவலன்
மேலே நோக்கி இருகரம் நீட்டி.
'மாலே! காக்கும் கடவுளே! இந்த
மனிதரைச் செந்தமிழ் மனிதரைக் காவாய்;
புனிதமார் கூட்டம் போற்றிடாய்' என்றே
கூவிய முழக்கம் செவியடைத் திடவும்
பாவியேன் மயங்கிச் சாய்ந்தே ....

• * •

... ... ஓஓ!
கனவோ இதுவரை கண்ட காட்சிதான்;
நனவுல கினிலே நான்வரல் ஆனபின்,
புத்தகக் கூட்டம் பத்திரிகைகள்
சித்தத் தில் எழுப்பிய சீரலை இதுவெனத்
தேர்ந்தே எழுந்தேன்; தேமாங் கிளையில்
ஓர்ந்தே ஓர்குயில் ஒலித்ததை உணர்ந்தேன்.
விழித்தேன் பகற்கன பலிக்குமோ என்றே
விழித்தேன்; விளப்பினேன்; வியனுல கீரே.
நாட்டுப் பணியில் நாட்டமிக் குடைய
ஈட்டமாய்ப் புத்தக எழுச்சிபெற் றோங்கிட
வாழும் இலக்கிய வான்சுவை யமுதைச்
நாளே செந்தமிழ் நாட்டிற்குத் திருநாள்!

நான்கு

பேராசிரியர் வ. பெருமாள் எம்.ஏ., பி.டி., எம்.ஆர்.ஏ.எஸ்.
தமிழ்ப் பேராசிரியர்,

ஒரு செயலைத் தொடங்குமுன் எல்லாம் வல்ல இறைவனை வணங்கி மேற்கொண்ட செயல் வெற்றிபெற வேண்டிக்கொள்வது மக்கள் இயல்பு எடுத்த செயல் இனிது முடியத் திருவருள் துணையை விரும்புவதும் வேண்டுவதும் எல்லாச் சமயத்தினரிடமும் காணப்படும் பொதுப்பண்பாகும். சங்கத்தமிழை முறையாகவும் முற்றிலும் கற்க விழைந்த ஔவையார் தாம் கற்கத் தொடங்குமுன் வினாயகரை விரும்பி வேண்டுகின்றார். அவ்வாறு இறைவனை வேண்டும்போது தாம் நான்கு பொருள்களை இறைவனுக்குத் தருவதாக உள்ளன்புடன் பாடுகின்றார். பால், தெளிந்த தேன், பாகு, பருப்பு ஆகிய நான்கைத் தமிழ் மூதாட்டி ஔவையார் வினாயகருக்குப் பேருவகையும் அன்பும் பொங்குமாறு தருவதாகப் பாடிய இனிய பாட்டு நம் உள்ளத்தில் பசுமரத்தாணிபோல் நன்கு பதிந்திருக்கின்றது.

> " பாலும் தெளிதேனும் பாகும் பருப்புமிவை
> நாலும் கலந்துனக்கு நான்தருவேன் — கோலஞ்செய்
> துங்கக் கரிமுகத்துத் தூமணியே நீயெனக்குச்
> சங்கத் தமிழ்மூன்றும் தா "

ஔவையார் குறிப்பிட்டுள்ள இந்நான்கு பொருள்களும் எல்லா வகையிலும் சிறப்பு வாய்ந்தவை. அவை உண்பதற்கு மிகவும் சுவையானவை; உடலுக்கு உறுதியையும் ஆற்றலையும் ஒருங்கே அளிக்க வல்லவை; எல்லோரும் மனமுவந்து உண்ணக்கூடியவை மக்கள் அனைவருக்கும் பொதுவானவை எனவேதான் ஔவையார் இந்நான்கையும் ஆய்ந்து தம் பாட்டில் இனிது குறிப்பிட்டுள்ளார்.

தமிழ்மொழியில் தோன்றியுள்ள நிகண்டுகளும் அகராதிகளும் பல. இத்தாலியிலிருந்து தமிழகத்திற்கு வந்த ஜோசப் பெஸ்கி என்னும் வீரமாமுனிவர் தமிழில் ஓர் அகராதியைத் தொகுத்தார். அது பெயரகராதி, பொருள் அகராதி, தொகை

அகராதி, தொடை அகராதி என்று நான்கு பிரிவுகளைக் கொண்டது. எனவே அது சதுரகராதி எனப் பெயர்பெற்றது. 'சதுர்' என்னும் வடசொல்லுக்கு நான்கு என்பது பொருள். இந்த அகராதி 1732-ல் உருவானது.

எழுத்துக்களையும் சொற்களையும் பகுத்தறிவு அடிப்படையில் பாகுபடுத்திய பாங்கு தமிழ் மொழிக்கு உரியது. உயிர்போல் அமைந்த எழுத்தை உயிர் எழுத்து என்றும், மெய் (உடம்பு) போல் அமைந்த எழுத்தை மெய்யெழுத்து என்றும், உயிரும் மெய்யும் கலந்த எழுத்தை உயிர்மெய் எழுத்து என்றும், இம்மூவகையினின்றும் தனித்து நிற்கும் எழுத்தைத் தனிநிலை அல்லது ஆய்தம் என்றும் தமிழ் இலக்கணம் வல்லார் வகுத்துள்ளனர். எழுத்துக்களை நான்கு வகையாகப் பிரித்ததைப்போல சொற்களையும் நான்கு வகையாக நமமுன்னோர் பிரித்துள்ளனர். செந்தமிழுக்கே உரிய இயல்பான முறையில் வழங்கும் சொல் இயற்சொல் எனப்படும். தமிழ்ச் சொல் திரிந்து (மாறி,) வருவது திரிசொல் எனப்படும். வெவ்வேறு திசைகளில் இருந்து வந்தவை திசைச்சொல் என்று குறிக்கப்படும். வடமொழியிலிருந்து வந்த சொற்கள் வடசொல் எனப்படும். இந்நால் வகைச் சொற்களையும் தொல்காப்பியர்

"இயற்சொல் திரிசொல் திசைச்சொல் வடசொல்லென்று
அனைத்தே செய்யுள் ஈட்டச் சொல்லே"

என்று மிகத்தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார். சொற்கள் புரிகின்ற பணி அடிப்படையில் அவற்றை நான்காக இலக்கண நூலார் வகுத்தனர். அவையாவன பெயர்ச்சொல், வினைச்சொல், இடைச்சொல், உரிச்சொல் ஆகும்.

ஈகை நான்கு வகைப்படும். அவையாவன புகழ், கண்ணியம், நட்பு, நிட்காமியம. ஆன்மிக அடிப்படையில் வாழ்க்கை நிலை தேவகதி, மக்கள்கதி, விலங்குகதி, நரககதி என்று நாற்பெரும் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. பழந் தமிழகத்தில் சங்கு ஒரு சிறந்த இசைக் கருவியாகக் கருதப்பட்டது: இன்று மணியடித்தவுடன பள்ளியில் வகுப்புக்கள் தொடங்குவதுபோல் அன்று சங்கு ஊதியவுடன் மதுரையம்பதியில் புலவர்கள் கூடினார்கள். சங்கொலி கேட்டுப் புலவர்கள் கூடியதால் புலவரவை சங்கம் எனப் பெயர்பெற்றது. எனவே, சங்கு தொன்மைக்கு எடுத்துக்காட்டாகத் திகழ்கின்றது. சங்கு நான்காகப் பகுக்கப்பட்டுள்ளது. அவையாவன: இடம்புரி, வலம்புரி, சலஞ்சலம், பாஞ்சசன்னியம்.

தருமையாதீனம், ஆவணிமூல விழாவில்



அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழாராய்ச்சித்துறைத்
துணைப் பேராசிரியர்,
வித்துவான், திரு. க. வெள்ளைவாரணனார் அவர்கட்கு
ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள்
" திருமுறை ஆராய்ச்சிக் கலைஞர் "
என்னும் பட்டம் வழங்கி ஆசியருளல்.

தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்களுடன்



இந்தியத் துணை ஜனாதிபதியாக இருந்தபோது
தருமையாதீனத்திற்கு வருகைபுரிந்த
இந்தியக் குடியாட்சித் தலைவர்,
மேதகு. V. V. கிரி அவர்கள் குடும்பத்தினர்.

நற்செயலைப் புண்ணியம் என்றும், தீய செயலைப் பாவம் என்றும குறிப்பிடுவது உலகமரபு. தவம், ஒழுக்கம், கொடை. கல்வி ஆகிய நான்கையும் புண்ணியத் தோற்றம் என்றும், தானம், கல்வி, தவம், ஒழுக்கம் ஆகிய நான்கும் புண்ணியம் எனறும் சுட்டப்படும். யோகம் நான்கு வகைப்படும். அவை யாவன : மரணயோகம், சித்தயோகம். அமிர்தயோகம், அமிர்த சித்தயோகம். மனம், புத்தி, சித்தம், அகங்காரம் ஆகிய நான்கும் நாற்கரணம் எனப்படும்.

'நாலுபேர் போனவழியில் நாம் போகவேண்டும்' என்பது தமிழகத்தில் தோன்றிய பழமொழி. சமய குரவராகிய அப்பர் சுந்தரர் திருஞானசம்பந்தர், மாணிக்கவாசகர் ஆகிய நால்வரே இப்பழமொழியில் குறிக்கப்பெற்ற 'நாலுபேர்'. அவர்கள் சென்ற வழி நான்கு வழியாயினும் நான்கும் நல்ல வழியே, அந்நான்கு வழிகளுக்குள்ளும் வேறுபாடு உண்டே தவிர முரண்பாடு இல்லை. அளவாலும் தன்மையாலும் சிறிது மாறுபட்டிருப்பதற்கு வேறுபாடு என்று பெயர். அடிப்படையில் மிகப்பெரிய அளவில் வேறுபட்டு இருப்பதற்கு முரண்பாடு என்று பெயர். மணிப்புறாவிற்கும் மாடப்புறாவிற்கும் இருப்பது வேறுபாடு. இரண்டையும் ஒரே இடத்தில் ஒன்றாகவே வளர்க்கலாம. ஆனால் சிங்கத்திற்கும் ஆட்டுக்குமிடையே இருப்பது முரண்பாடு சிங்கத்தையும் ஆட்டையும் ஒரே கூண்டில் வைத்து வளர்க்க முடியாது. அப்பர் பின்பற்றிய நெறி தொண்டு நெறி (தாச மார்க்கம்). 'என் கடன் பணி செய்து கிடப்பதே' என்ற குறிக்கோளைக் கடைப்பிடித்த அப்பர், தம்மை இறைவனுக்கு அடிமையாகக் கருதி முழுமனத்துடன் தொண்டு புரிந்தார். சுந்தரர் இறைவனைத் தம் தோழனாகக் கருதிச் சம உரிமையுடன் ஒழுகினார். 'என் தோழனுமாய்' என்று முழு உரிமையுடன் இறைவனைக் குறிப்பிட்ட சுந்தரர் பின்பற்றிய நெறி சக மார்க்கமாகும். திருஞானசம்பந்தர் இறைவனைத் தந்தையாகவும் தம்மை மகனாகவும் கருதி ஒழுகினார். அவர் பின்பற்றிய நெறி சற்புத்திர மார்க்கம் எனப்படும். மாணிக்கவாசகர் தம்மை மாணவராகவும் இறைவனை ஆசிரியராகவும் போற்றி வழிபட்டார். அவர் கடைப்பிடித்த நெறி ஞானமார்க்கம். இவ்வாறு சைவசமய குரவர் நால்வரும் நான்கு நன்னெறியைப் பின்பற்றிச் சிறப்புற்றனர். சமயகுரவர் நால்வர் இந்நாட்டில் சிறந்து வாழ்ந்தது போல் நான்கு சந்தான குரவர்களும் சிறந்து திகழ்ந்தனர். மெய்கண்டதேவர், அருணந்தி சிவாசாரியர், மறைஞானசம்பந்தர், உமாபதிசிவாசாரியர் ஆகியோர் சந்தான குரவர் எனப்படுவர்.

தமிழ் இலக்கியத்துறையில் நான்கு பிரிவுகளைப் பல இடங்களில் காணலாம். யாப்பு அடிப்படையில் செய்யுளை வெண்பா, ஆசிரியப்பா, வஞ்சிப்பா, கலிப்பா என்று நான்காகப் பிரிப்பது உண்டு. ஒவ்வொரு பாவிற்கும் ஒவ்வொரு வகையான ஓசையுண்டு வெண்பாவிற்குரியது செப்பலோசை; ஆசிரியப் பாவிற்குரியது அகவலோசை; வஞ்சிப்பாவிற்கு உரியது தூங்கலோசை; கலிப்பாவிற்கு உரியது துள்ளல் ஓசை. பாட்டை ஏட்டிலிருந்து நேரடியாகப் படிக்காமல் சேய்மையிலிருந்து கேட்டாலும் அது இன்ன யாப்பு வகையைச்சேர்ந்தது என்று அதன் ஓசையைக் கொண்டே சொல்லிவிட இயலும். பாட்டின் அமைப்பைக் கண்ணால் கண்டும், அதன் ஒலி அமைப்பைக் காதால் கேட்டும் பாகுபடுத்திய நுட்பம் ஈண்டு நோக்கி மகிழத்தக்கது. கட்புல அடிப்படையில் 4 பாக்களாகவும் செவிப்புல அடிப்படையில் நான்கு வகை ஓசையாகவும் செம்மையான முறையில் பாகுபடுத்தியிருப்பது நம் முன்னோரின் நுண்மாண் நுழைபுலத்தை இனிது புலப்படுத்துகின்றது. நேரிசை ஆசிரியப்பா, இணைக்குறள் ஆசிரியப்பா, நிலைமண்டில ஆசிரியப்பா அடிமறிமண்டல ஆசிரியப்பா என்று ஆசிரியப் பாவை நம் முன்னோர் பாகுபடுத்தியுள்ளதும் ஈண்டு குறிப்பிடத் தக்கது.

செய்யுளுக்கு நான்கு வகையில் உரை கூறுவதுண்டு. அவையாவன: பதவுரை, கருத்துரை, பொழிப்புரை, அகலவுரை. உரையிலக்கணம் நான்கு வகைப்படும். அவையாவன பதம், பதப்பொருள்; உதாரணம், வினாவிடை. பாக்களை இயற்றும் புலவர்கள் ஆசுகவி, மதுரகவி, சித்திரகவி, வித்தாரகவி என நான்கு வகைப்படுவர். பண்ணும் பாடலும் நன்கு இயைந்திருக்கவேண்டும்.

'பண்ணென்னும் பாடற் கியைபின்றேல் கண்ணென்னும்
கண்ணோட்டம் இல்லாத கண்',

என்பது திருக்குறள். பண்ணோடு இயைந்த இனிய பாடலைத் தமிழ் இசைவாணர்கள் பாலை, குறிஞ்சி, மருதம், செவ்வழி ஆகிய நான்கு பண்களில் இசைத்துத் தாமும் மகிழ்ந்து பிறரையும் மகிழ்வித்தார்கள்.

(தொடரும்)

பலனையும் முக்தியையும் அடைவார்களாம். இந்த விழாவைக் 'கும்பமேளா' என்று வழங்குவார்கள். உஜ்ஜயினியில் நடக்கும் கும்ப மேளாவைப் போல, பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை கொண்டாடப்பெறும் மற்றொரு திருவிழாவுக்கு 'ஸிம்ஹஸ்த மேளா.' என்று பெயர். 'சிம்மத்தில் இருக்கும்' என்று பொருள்படும் 'ஸிம்ஹஸ்தமேளா'வை உஜ்ஜயினியில் சிறப்பாகக் கொண்டாடுகிறார்கள்.

வடஇந்தியப் பஞ்சாங்கத்தின்படி வைகாசி மாதம் சுக்கில பக்ஷத்தில் சிம்மராசியில் குருவும், மகர ராசியில் சூரியனும், துலா ராசியில் சந்திரனும், சுவாதி நட்சத்திரமும், பௌர்ணமியும் கூடிய சுபதினத்தில் சிப்ராநதியில் நீராடினால் அவர்களுக்கு மோக்ஷம் கிட்டும் என்று ஸ்காந்தபுராணம் கூறுகிறது. இம் மாதிரியான சேர்க்கை பரிபூர்ணமாகச் சென்ற ஆண்டு நிகழாமல் இருந்த போதிலும், சாஸ்திர நிபுணர்களின் ஒருமுகமான கருத்தின்படி, பதினோராவது ஆண்டிலேயே அதாவது கீலக வருஷம் சித்திரை மாதம் முழுவதும் இந்த விழாவைக் கொண்டாடினார்கள். பெரும்பாலும் ஒவ்வொரு முறையும் கும்ப மேளாவும் ஸிம்ஹஸ்த மேளாவும் ஒன்றுகூடியே உஜ்ஜயினியில் நடைபெறும். ஆனால் இவ்வாண்டு கும்பமேளா மாத்திரம் தனியாக நடைபெற்றது. அதன்படி சூரியன் மேஷ ராசியில் சேரும் நாளான ஏப்ரல் 13 (தமிழ்ப்புத்தாண்டு), ஏப்ரல் 16 (அமாவாசை) ஏப்ரல் 19 (அக்ஷய திருதியை), மே 2 (சித்ராபூர்ணிமை) மே 12 (ஏகாதசி) ஆகிய நாட்களை நீராடும் சுபதினங்களாக நிர்ணயித்தனர். இவ் விழாக்கள் தனியாகப் பிரிந்து வருவது மிகவும் அரிது. அப்படி வருமாயின் கும்பமேளாவுக்கே உஜ்ஜயினியில் அதிக மகத்துவம். இப்பொழுது நடைபெற்ற கும்பமேளாவுக்கு ஏறத்தாழ ஐம்பதினாயிரம் சாதுக்கள் வந்தார்களாம்.

உஜ்ஜயினி புராணங்கள் புகழும் முத்திநகர் ஏழில் ஒன்று. அமரர்களோடு அரன்கூடித் திரிபுராசுரனைப் பாசுபதாஸ்திரத்தால் அழித்தானாம். அசுரனுக்கு ரோஷம் ஏற்பட்டதாம். அதனால் 'உஜ்ஜித்' என்ற பேர் வந்து பிறகு உஜ்ஜயினி என்று மாறிவிட்டதாம். ஜைன மதத்தை உன்னத நிலைக்குக் கொணர்ந்த இடமாதலால் 'உத்ஜைன' என்ற சொல்லே உஜ்ஜைனி என்று மருவியது என்பர் சிலர்; மத்யப் பிரதேசத்தின் தலைநகரான போபாலிலிருந்து 113 மைல் தூரத்தில் உள்ளது உஜ்ஜயினி நகரம். இதிகாசங்கள். எண்ணற்ற புராணங்கள், பௌத்த ஜைன நூல்கள் முதலியன இந்நகரைப்

பற்றிப் புகழ்ந்து பேசுகின்றன. மிருச்சகடிகம், காதம்பரி, கதாஸரித்ஸாகரம், சிவலீலாமிருதம் மேகஸந்தேசம் முதலியவை அவந்தி நாட்டின் தலைநகராக விளங்கிய உஜ்ஜயினியின் எழிலைக் கூறுகின்றன. வானளாவும் மாடமாளிகைகளையும் கூட கோபுரங்களையும், மிகப் பெரிய தேர்களும் ஒருங்கே சேர்ந்து செலக்கூடிய அகன்ற விதிகளையும் மலர்ச்சோலைகளையும் கொண்டு குபேரனது அளகாபுரியோ என்று வியக்கும்படியாக உஜ்ஜயினி இருந்ததாகப் பாணபட்டர் கூறுகிறார். இம்மா நகருக்கு அவந்திகா, கனகச்ருங்கா, குமுதவதி, குசஸ்தலி, பத்மாவதி, பிரதிகல்பா, போகவதி, விசாலா, ஹிரண்யவதி என்ற பெயர்களும் உண்டு.

லிங்க புராணத்தில் இந்நகரிலுள்ள மகாகாளேசரின் பெருமை வருகிறது. சிப்ராநதியில் நீராடி இந்த ஈசனைப் பிரகலாதன் தரிசித்ததாக வாமன புராணம் கூறும். மகாகாளத்துக்கு அருகிலுள்ள தீர்த்தத்தைத் தீண்டினாலும் அசுவமேத யாகப் பலன் கிட்டும் என்று மகாபாரதம் சொல்லும்; கிருஷ்ணனும் பலராமனும் சுதாமாவோடு கல்வி பயின்றதாக விஷ்ணு புராணத்தில் வரும் சாந்திபனியின் குருபீடம் இங்கேதான் இருந்தது. இரண்டு அப்தங்களின் காரணகர்த்தர்களான விக்கிரமாதித்தன், சாலிவாஹனன் ஆகிய இருவரும் இந்த நகரில்தான் தோன்றினர். சிலப்பதிகாரம், யசோதர காவியம், பெருங்கதை முதலிய அருந்தமிழ் நூல்களிலும் உஜ்ஜயினியைப் பற்றிய செய்திகள் பல வருகின்றன.

வானசாஸ்திரத்துக்கும், சோதிடத்துக்கும் க்ரீன்விச்சை ஐரோப்பாவில் எவ்வாறு முக்கியமாகக் கருதுகிறார்களோ, அந்தச் சிறப்பு இந்தியாவில் உஜ்ஜயினிக்கும் உண்டு. ஏனெனில் இந்த நகர் வழியாகச் செல்லும் கடகரேகை கால நிர்ணயங்களைக் கணிப்பதற்கு ஏற்றதாக உள்ளதாம். இலங்கையிலிருந்து மேருமலை வரையில் செல்லும் மத்தியரேகை இந்த நகரைக்கடந்து செல்லுகிறது என்பதைப் பாஸ்கராசாரியர் எழுதிய சிந்தாந்த சிரோமணி என்ற நூலில் கோள அத்தியாயத்தில் காணலாம். இங்கே ராஜா ஜயஸிங் கட்டிய யந்த்ர மஹல் என்ற வான ஆராய்ச்சி நிலையம் இன்றும் பஞ்சாங்கம் கணிக்கும் பணியில் ஈடுபட்டுள்ளது.

மகாப்பிரளய காலத்தில், உலகிலுள்ள உயிர்க்கூட்டங்களின் கருக்கள் இங்குள்ள மகாகாளேசர் உருவச்சிலையில் வைத்துக் காப்பற்றப்பட்டன. பிரளய காலத்துக்குப் பிறகு இங்கிருந்து

சிவமயம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்திற்குச் சொந்தமான

திருவையாறு ஸ்ரீ பஞ்சநதீசுவரசுவாமி தேவஸ்தானத்தில்

கோடி அர்ச்சனைத் தொடக்க விழா

ஸ்ரீ பஞ்சநதீசுவரசுவாமி ஆலயத்தில் இரண்டாண்டுகளாகத் தொடர்ந்து நடைபெற்றுவரும் திருப்பணிகள் விரைவில் நிறைவுற்று மகாகும்பாபிஷேகம் இனிது நிறைவேறவும், உலக நலங்கருதியும், திருப்பணிக்கு நிதி உதவி வேண்டியும் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகா சந்நிதானத்தின் திருவுளப்பாங்கின்வண்ணம் நிகழும் சௌமியஹு ஆவணிமீ 29உ (14—9—69) ஞாயிற்றுக்கிழமை காலை 6 மணிக்கு ஸ்ரீ தர்மசம்வர்த்தனி அம்பாளுக்கும், ஸ்ரீ பஞ்சநதீசுவரசுவாமிக்கும் தனித்தனியே கோடி அர்ச்சனை தொடங்கப்பெறுகிறது.

14—9—69 தொடக்கத்தன்று சுவாமிக்கும் அம்பாளுக்கும் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணியின் உபயமாக ஏகதின லக்ஷார்ச்சனை நடைபெற உள்ளது. பொதுமக்களும், பக்தர்களும் அர்ச்சனைகளிலும், திருப்பணிகளிலும் பங்குகொள்வதற்கு வாய்ப்பாக சகஸ்ரநாமார்ச்சனை ஒன்றுக்கு ரூ. 10—00 என்று கட்டணம் அமைக்கப்பட்டுள்ளது. இத்தொகையில் ஒரு பகுதி அர்ச்சனைக்கும் ஒரு பகுதி திருப்பணிக்கும் சேர்கிறது. சுவாமிக்கு ஒரு அர்ச்சனை, அம்பாளுக்கு ஒரு அர்ச்சனை செய்ய ரூ. 20—00 ஆகிறது இப்படி இரு அர்ச்சனை செய்வோர் 10,000ம் பேர் சேர்ந்தால் கோடி அர்ச்சனை பூர்த்தியாகிவிடும். இக்கோடி அர்ச்சனையில் பங்கு கொள்வோர் ஆலயத் திருப்பணியிலும் பங்கு கொண்டவர்களாகிறார்கள். எளியவர்களும் இப்புனிதப் பணியில் பங்குபெறும் வாய்ப்புக் கிடைக்கிறது.

நாள் ஒன்றுக்கு சுவாமிக்கு பத்து சகஸ்ரநாமார்ச்சனையும், அம்பாளுக்குப் பத்து சகஸ்ரநாமார்ச்சனையும் முறையாக நடத்துவதாகத் திட்டம். ஏகதின லக்ஷார்ச்சனை செய்வதற்கு ரூ 750—00 ஆகிறது. அன்பர்கள் இச் சிவபுண்ணியப் பணியில் விரைந்து பங்குகொண்டு ஸ்ரீ தர்மசம்வர்த்தனி உடனுறை ஸ்ரீ பஞ்சநதீசுவரர் அருளுக்குப் பாத்திரராவார்களாக,

14—9—69 மாலை ஏகதின லக்ஷார்ச்சனைப் பூர்த்தியின்போது தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்கள் அருளாசி வழங்குவார்கள். சென்னை அறநிலைய ஆணையர் திருவாளர். இரா. இராமசுப்பிரமணியம் B. Sc., B. L., அவர்கள் திருப்பணி உண்டியலைத் தொடங்கி வைப்பார்கள். தஞ்சை அறநிலையத் துணை ஆணையர் திருவாளர். T. N. சிங்காரவேல் B. A., B. L, அவர்கள் சிறப்புரையாற்றுவார்கள்.

தொகை அனுப்புவோர் கீழ்க்காணும் விலாசத்திற்கு அனுப்பவும். காஷியர், ஸ்ரீ பஞ்சநதீசுவரசுவாமி தேவஸ்தானம், திருவையாறு, தஞ்சை மாவட்டம்.

அன்பர்கள் வருக! பயன் பெறுக!!

திருமுறை வெளியீடுகள்

1 திருஞானசம்பந்த சுவாமிகள் தேவாரம்

முதல் திருமுறை (ராப்பர்)	ரூ.	3—50
இரண்டாந் திருமுறை (காலிகோ)	ரூ.	5—00
மூன்றாந் திருமுறை (காலிகோ)	ரூ.	5—75

2. திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரம்

நான்காந் திருமுறை (காலிகோ)	ரூ.	8—00
ஐந்தாந் திருமுறை (காலிகோ)	ரூ.	8—00
ஆறாந் திருமுறை (காலிகோ)	ரூ.	8—00

3. சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரம்.

ஏழாந் திருமுறை (காலிகோ)	ரூ.	8—00

4. திருவாசகம் திருக்கோவையார்

எட்டாந் திருமுறை (காலிகோ)	ரூ.	9—00

5. திருவிசைப்பா திருப்பல்லாண்டு

ஒன்பதாந் திருமுறை (காலிகோ)	ரூ.	5—50

[கிடைக்குமிடங்கள்]

1. காஷியர்,
தருமையாதீனம், தருமபுரம், மாயூரம் போஸ்ட்.
2. டிரஷரர், ஸ்ரீ வைத்தியநாதசுவாமி தேவஸ்தானம்,
வைத்தீசுவரன்கோயில். தஞ்சாவூர் ஜில்லா.
3. காஷியர், ஸ்ரீ சட்டைநாதசுவாமி தேவஸ்தானம்,
சீகாழி, தஞ்சாவூர் ஜில்லா.
4. காஷியர், ஸ்ரீ கம்பகரேசுவரசுவாமி தேவஸ்தானம்,
திருபுவனம், (திருவிடைமருதூர் வழி) தஞ்சாவூர் ஜில்லா.
5. காஷியர், ஸ்ரீ அருணஜடேசுவரசுவாமி தேவஸ்தானம்,
திருப்பனந்தாள், கும்பகோணம் வழி.
6. காஷியர், ஸ்ரீ தியாகராஜசுவாமி தேவஸ்தானம்,
திருக்குவளை, நாகப்பட்டினம் தாலூகா.
7. காஷியர், ஸ்ரீ அமிர்தகடேசுவரசுவாமி தேவஸ்தானம்,
திருக்கடவூர், தஞ்சாவூர் ஜில்லா.
8. தருமையாதீன மடாலய தேவாலய சமயப் பிரசார நிலயம்,
41. உஸ்மான்ரோடு, தியாகராயநகர், சென்னை - 17.
9. தருமபுரம் மடம் காரியம்
வீரராகவபுரம், திருநெல்வேலி சந்திப்பு, திருநெல்வேலி.

குறிப்பு:— தொகையை முன்பே அனுப்பிப் பெறல்வேண்டும்.
தபால் செலவு தனி.